# அழகு ரோஜா

இளங்கீரன்

நூ.797



# அழகு ரோஜா

※

ஆசிரியர் :

இளங்கீரன்

※

சத்தி பதிப்பகம்

தபால் பெட்டி எண் 1684

சென்னை - 1

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல்வரிசை எண்: 486
நன்கொடை எண்: 486

முதல் பதிப்பு—1953

பதிப்புரிமை



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

முத்துக்குமரன் அச்சகம்,
14-ஏ, குப்பையர் தெரு, சென்னை-1

# முகவுரை

மக்கள் சீனவின் சிறந்த எழுத்தாளருள் ஒருவரென மதிக்கப் படும். 'டிங்லிங்' என்ற அம்மையார் இலக்கியத்தைப் பற்றி எழுதியுள்ள கட்டுரை யொன்றில் பின் வருமாறு குறிப் பிட்டுள்ளார்.

" இலக்கியத்தை........உணர்ச்சி ததும்ப அமைக்கவேண்டும். எழுத்தாளன் உணர்ச்சியோடு வாசகரும் கலக்கும்படி யிருக்க வேண்டும் "

"....யதார்த்தத்தை வர்ணிப்பதோ, அப்படியே சித்தரிப்பதோ போதாது ; இலக்கியம் நடைமுறையை ஒத்ததாக இருக்க வேண்டும் !"—என்று குறிப்பிட்டுள்ளார்.

**அழகு ரோஜா** — இப்படிப்பட்ட ஒரு எழுத்தோவியந் தான். சில சம்பவங்களும், மனித உணர்ச்சிகளுக்குக் கொடுககப்பட்ட உருவமும்தான் இக்குறு நாவல்.

**அழகு ரோஜா** — ஒரு குறு நாவல்தான். இதிலே வரும் சம்பவங்கள் நடைமுறைக்கு ஒத்ததாக இருப்பவைதான் என்பதை மனித வாழ்க்கையை ஊன்றிக் கவனிப்போர் தெரிந்து கொள்வார்கள்.

மனிதனைச் சுற்றிச் சுழலும் சம்பவங்கள் — அவனுடன் மோதும் நிகழ்ச்சிகள் — அவனிடம் உறங்கிக் கிடக்கும் பல் வேறு பட்ட உணர்ச்சிகளை எழுப்பி அச்சமும், அதிர்ச்சியும் கொடுக்கக் கூடிய செய்கையில் இறங்க வைத்து விடுகின்றன. இந்த இடத்தில் நல்லவன் கெட்டவனுகிறுன், பூனைபோல் உள்ளவன் புலியாக மாறி விடுகிறுன். புன் சிரிப்போடு சாதுவாக இருந்தவன் புயலெனக் கிளம்பி கொடுமையிலே — கொடூரச் செயல்களிலே சதுராடுகிறுன்.

இவைகளை — சம்பவங்களையும், அவற்றினல் எழுப்பப்பட்ட உணர்ச்சிகளின் கோர விளைவுகளையும் — சித்தரிப்பதுடன் நின்று விட்டால் போதுமா ? தகாத காரியத்தைச்செய்த அந்த உணர்ச்சிகளை எழுப்பிய சம்பவங்களின் அடிப் படையை ஆராயவேண்டும். பிறகு, அதை விளக்க வேண்டும். அப்போதுதான் அச்சம்பவங்களைச் சிருஷ்டிக் கும் சூழ் நிலையும், அச்சூழ் நிலையை உருவாக்கும் வாழ்க்கை முறையும் சரியா தவரு என்பதை வாசகர்கள் சிந்திக்க வழி ஏற்படும்.

ஒரு பாத்திரத்தை வாசகன் முன்னுல் எழுத்தாளன் காட்டு கிருன். அப்படிக்காட்டும்போது அப்பாத்திரத்தின் பண்பு களை — குணங்களைச் சித்தரிக்கிருன்.

“ இது மட்டும் போதுமா ?”

கதை, கதைக்காக — பொழுது போக்குக்காக — என்று கருதும் எழுத்தாளர்கள் வேண்டுமானுல் அத்துடன் நிறுத் திக் கொள்ளலாம். ஆனுல்—

மனித வாழ்க்கையிலே நிகழும் கொடுமைகளையும், சீரழிவு களையும், நச்சுத்தன்மைகளையும் பொறுக்கி அவற்றிலே மெருகு ஊட்டி நல்ல முறையில் ஒரு கதையாக அமைத்து, அதன் வாயிலாக மக்களின் சிந்தனையைத் தூண்டிவிடும் நோக்கங்கொண்ட ஒரு எழுத்தாளன் தான் படைக்கும் பாத்திரங்களின் பண்பை — குணும்சங்களை — அப்பாத் திரம் எங்கிருந்து — எவ்விதமான வாழ்க்கை அமைப்பி லிருந்து — எவ்விதமான சூழ் நிலையிலிருந்து பெறுகிருன் என்பதைக் காட்டத் தவற மாட்டான். இவ்விதமாக அவன் காட்டுவதால், இன்றையச் சமுதாய வாழ்க்கையின் இயல்பை வாசகர்களால் உணர முடிகிறது.

எழுத்தாளனுக்கு ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். அவன் படைக்கும் இலக்கியங்கள், மக்களின் வாழ்க்கையில் ஒரு மாற்றங்காண — அவர்களின் மனே உணர்ச்சி களுக்குப் பிறப்பிடமான சம்பவங்களைச் சிறந்ததாகப் படைக்கக் கூடிய முறையில் சூழ் நிலையும், அச்சூழ் நிலக்கு அடித்தளமாக இருக்கும் சமுதாய மாற்றத்தையும் காண — பயன்பட வேண்டும்.

இந்த **அழகு ரோஜாவில்** மேற் கூறியவை எல்லாம் இருக் கின்றன என்று நான் கூறவில்லை. இது குறு நாவல். ஆகவே இந்தக் கருத்துக்கள் குறுகிய அளவில்தான் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன. இது ஒரு முழு நாவலாக இருந் தால் மேற் கூறிய வற்றை ஓரளவுக்கு நிறைவேற்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

இந்த சிறு நாவலுக்கு இவ்வளவு நீண்ட முகவுரையா ? என்று கேட்கத்தோன்றும் உங்களுக்கு. இக்குறிப்பு **அழகு ரோஜாவுக்காக** மட்டும் எழுதப்பட்ட தல்ல.

முகவுரை எழுதித்தாருங்கள் — என்று கேட்டார் இதை வெளியிட்ட தோழர். இக் குறிப்பை எழுதினேன். அவ்வளவு தான்.

**இளங்கீரன்.**

# அழகு ரோஜா

## 1

**கொலை** செய்தவன் கூண்டிலே நின்று கொண்டிருந்தான். ஆனால், அவனுடைய முகத்திலே கொடூரமில்லை. அமைதி தவழ்ந்து கொண்டிருந்தது. விழிகளில் பயமோ, திகிலோ எதுவுமேயில்லை ; மகிழ்ச்சி மண்டிக் கிடந்தது.

நீதிபதி பல தடவை அவனைப் பார்த்து விட்டார். திரும்பவும் ஒரு முறை அவனைப் பார்த்தார். அவனுடைய சாந்தம் தவழும் முகம், அமைதியுடன் - வந்த வார்த்தைகள், அவன் கொடுத்த வாக்கு மூலத்திலே திறந்து காட்டிய உணர்ச்சிகள் - எல்லாம் அவன் கொலை செய்யக் கூடியவனல்ல - அந்த விதமான இதயத்தைக் கொண்டவனுமல்ல - என்று எடுத்துக் காட்டியது நீதிபதிக்கு. என்றாலும், கொலை செய்து விட்டான் ஒருவரை. ஒப்புக்கொள்கிறான், நான்தான் கொலை செய்தேன் என்று !

நீதிபதி சிந்தித்தார், குற்றம் செய்யக்கூடிய முறையிலே ஒருவனின் உயிரைப் பறிக்கக் கூடிய முறையிலே - நல்ல சுபாவ முள்ளவர்கள் கூட துணிந்து விடுகிறார்கள். இல்லை தூண்டப்படுகிறார்கள். அந்தக் கோரச் செயலுக்கு தயாராகும்படி மனோ உணர்ச்சிகள் தூண்டப்படுகின்றன, அவ்வித மனோ உணர்ச்சிகள் எழ காரணமான சம்பவங்களை - அந்தக் குற்றவாளி கூறிய கதையை - நன்றாக ஆராய்ந்தார். விசித்திரமாக இருந்தது, வேதனையாக இருந்தது: ஆத்திரமாகக்கூட இருந்தது அவருக்கு ! அவர் சிந்தனையிலே தான் இருந்தார்.

கோர்ட்டிலிருந்த அனைவருடைய பார்வையும் நீதிபதி யின் பக்கமே திரும்பியிருந்தன. "எப்படித் தீர்ப்பு கிடைக்கும்?"— என்ற கேள்விதான் எல்லோருடைய உள்ளத்திலும்.

நீதிபதி கோர்ட்டில் குழுமியிருந்த அனைவரையும் பார்த் தார். ஒரு ஓரத்தில் கிடந்த பெஞ்சிலே சோகமுடன் உட் கார்ந்திருந்த ஒரு இளைஞனும்—ஒரு இளம் பெண்ணும் அவரு டைய பார்வையைக் கவர்ந்தனர். அந்த இளைஞன் சொன்ன வாசகத்தை நினைவுக்குக் கொண்டு வந்தார் நீதிபதி!

"என் தந்தை இறந்தது குறித்து நான் துக்கப்பட வில்லை. ஆனல், அவரைக் கொலை செய்ததற்காகத் தண் டிக்கப்பட இருக்கிருரே அந்த மனிதர், அவருக்காகத்தான் துக்கப்படுகிறேன். "எங்களிருவரின் வாழ்வுக்காக, தன் வாழ்க்கையைச் சாகடித்துக் கொண்டார், இந்த மனிதர்....!"

நீதிபதி இன்னும் சில நிமிடங்கள் சிந்தித்தார். பிறகு, அவருடைய பேனு தீர்ப்பெழுதத் துவங்கியது........!

"ஆறு வருஷம் கடுங்காவல் தண்டனை!"

நீதிபதி எழுந்து சென்றுவிட்டார். எல்லோரும் ஆச்சர் யத்துடன் - திகைப்புடன் அப்படியே நின்றனர் சில விநாடி கள். அவர்கள் இம் மாதிரித் தீர்பை எதிர் பார்க்கவில்லை. பதினைந்து வருடம் தண்டனை - அல்லது மரண தண்டனை! ஆனல்——

"அண்ணு!" என்று கூவினுள் ஒரு பெண்!

"ரோஜா...........என்று எதிர் கூச்சலிட்டான் கூண்டுக் கைதி.

* * *

முல்லை, துளசி, சண்பகம், கனகாம்பரம், மனோரஞ்சிதம், மல்லிகை............எத்தனையோ மலர்கள் பெண்களின் தலையில் மட்டுமல்ல, அவர்களாகவே - உயிரும் உடலும் சேர்ந்த அழகிய மங்கையராகவே உருவெடுத்து மற்றவர்கள் ஆசையுடன் - அன்புடன் - அழைப்பதற்கு ஏற்ற முறையிலே இருக்கின்றன. ஆனால், 'ரோஜா'? அப்படியில்லை! சரோஜா என்ற பெயர் இருக்கிறது. ஆனால் ரோஜா?

தன் தங்கைக்கு 'ரோஜா' என்று பெயர் வைத்தால் அது நிலைக்குமோ, ஊரார் கேலி செய்வார்களோ, கிண்டல் பண்ணுவார்களோ என்றெல்லாம் மாதவன் நினைக்கவில்லை. அவன் 'ரோஜா" என்று கூப்பிட, அவள் "ஏன் அண்ணா ........?" என்று கேட்கவேண்டும். இந்த வரையிலாவது தன் 'ரோஜா' வாடாமல், கருகாமல் இருந்தால் போதும். இதுதான் அவன் நினைவு. எனவே தன் தங்கைக்கு ரோஜா என்று பெயர் வைத்துவிட்டான்.

மாதவனுக்கு தன் தங்கையை தவிர, இந்த உலகத்திலே வேறு யாரும் கிடையாது! அவன் பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொண்டபோது, ரோஜா சிறுமி. அவன் பெரியவன். அவன் அணைப்பிலே - ஆதரவிலே - அன்பிலே வளர்ந்து வந்தாள் அவள். சிறு குழந்தையாக இருக்கும்போதே கண்ணைப்பறிக்கும் அழகுடன் திகழ்ந்தாள். மாதவன் அவள் அழகைக்கண்டு ஆனந்தப்படுவான். அவளுடைய பட்டுக் கன்னங்களைத் தட்டுவான்; மடியில் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சுவான்: அவள் தத்தி நடக்கும் பிஞ்சு நடையைபார்த்து மகிழ்வான்: மேசையில் தூக்கி வைத்துக்கொண்டு அழகு பார்ப்பான்: தான் கொஞ்சிய கன்

னங்களை நன்ருகக் கவனிப்பான்: அது ரோஜா போன்று இருக்கும். ரோஜாவை நினைத்துக்கொள்வான. அவள் உருவம் முழுவதும் ரோஜாபோல அவனுக்குத் தோன்றும். இயற்கையிலேயே ரோஜா பூவின் மேல் அதிகமான பிரியம் கொண்ட அவன் தன் தங்கையையும் ரோஜாவாக்க நினைத் தான். எனவே 'ரோஜா' என்று பெயர் வைத்துவிட்டான். ஊராரைப் பொறுத்த அளவிலே இந்தப் பெயர் நிலை நின்றதோ என்னவோ, மாதவனைப் பொறுத்த அளவில் இந்தப்பெயர் நிலைத்து விட்டது. அந்த ரோஜாவைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தான். மாதவனுடைய ஆசை, இன்பம், பொருள், உயிர் - எல்லாம் அந்த ரோஜாதான். உலகமே அந்த ரோஜாதான். அந்த அளவுக் குத் தன் தங்கைமேல் பாசம் வைத்திருந்தான்.

மொட்டாக இருந்த ரோஜா மலர்ந்து மணம் வீச துவங் கினள். பண்பட்ட நிலத்திலே உரமிட்டு, பாத்தி கட்டி, கவனிப்புடன் வளர்த்த தளதள என்றிருக்கும் செடியிலே ஆன்றலர்ந்த மலர்போன்று மணம் வீசிக்கொண்டிருந்த ரோஜாவை காணக்காண மாதவனின்மனதிலே பெருமையும் பூரிப்பும் பொங்கியெழுந்தன. அந்த அழகுக் குவியலின் அண்ணனுக இருப்பதை நினைக்கும்போது அவனை அறியா மலே ஒரு கர்வம் கூட முளைவிட்டது.

அழகு வசீகரித்த எத்தனையோ உலகப் புகழ் வாய்ந்த அற்புதங்களை யெல்லாம் நினைத்துக்கொள்வான். தன் அழ கிய மனைவிக்காகப் பாபிலோன் மன்னன் நபுட் நஸ்ஸார் தொங்கும் தோட்டம் அமைத்தான்; ரோம் பெற்றெடுத்த வீரன் அண்டனி தன் அழகிய காதலிக்காக எத்தனையோ நாடுகளைஜெயித்தான்: மனைவிக்காக - அவள் மேல்கொண்ட

காதலுக்காக - அந்த காதல் முளைத்தெழக் காரணமாயிருந்த அழகுக்காக சாஜஹான் மன்னன் தாஜ்மஹாலைக்கட்டினான். ஆனால் தன்தங்கைக்கு வரும்கணவன் இந்தமாதிரியெல்லாம் செய்யாவிட்டாலும், அவளுடைய வாழ்வைச் சொர்க்கமாக்கு வான். இளமையும் அழகும் உள்ள ஒரு இளைஞன் தன் தங்கைக்கு கணவனாக வருவான். அவன் அவளுடைய வாழ்விலே இன்ப மழை பெய்விப்பான். ரோஜா மகிழ்ச்சி யுடன் வாழ்வாள்............அவளுடைய வாழ்க்கை சொர்க்க மாகவே யிருக்கும் ! என்று கற்பனைக் கனவுகளில் நீந்துவான்.

ரோஜா மட்டுமென்ன, அவளும் மாதவனின் நினைவைப் பிரதி பலித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய ஆசைக் கனவுகள் ஒவ்வொன்றும். ஒவ்வொரு தேன் கூட்டு. இன்பத் தின் ஒதுக்கல்! ஆனந்தத்தின் வடிப்பு ! அந்த ஆசைக் கனவுகள் நனவாகும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந் தாள். அந்த நாளும் வந்தது. ஆனால்...........

* * *

## 2

எஸ். டி. எஸ். என்றால் சுந்தரேஸ்வரரின் பஸ் கம் பெனி என்பது எல்லோருக்கும் தெரியும். 'சுந்தரேஸ்வரர் ட்ரான்ஸ்போர்ட் சர்வீஸ்' என்ற பஸ் கம்பெனிக்குச் சொந் தக்காரராக இருப்பதால் மட்டும் அவர் பணக்காரரல்ல. அவ ருக்கு இன்னும் எத்தனையோ தொழில்களில் பங்குண்டு. அவர் பூர்வீக முதலாளித்துவம், புடம்போட்ட பூர்ஷ்வா ! அவருடைய வரவு-செலவு, நிர்வாக வேலை—எல்லாவற்றை யும் பார்க்க ஆட்கள் இருக்கத்தானே செய்வர். எனவே, அவை பற்றி அவர் அக்கறை செலுத்துவதில்லை. ஆனல்.

ஒன்றில் மட்டும் மிக மிகக் கவனம் செலுத்திக் கொண்டிருந் தார். அந்த 'மகத்தான' வேலையை யாரிடமும் அவர் கொடுக்கவில்லை. கொடுக்கக்கூடிய வேலையுமல்ல. அது தான் "அவருக்கு மங்கையர் மலரடி வருடி........" என்ற பாட் டைச் செயலில் நடத்துவது. அதாவது அருணகிரியாக மாறுவது. இப்படிப்பட்ட சுந்தரேஸ்வரர் சில மாதங்களுக்கு முன் மாதவனின் வீட்டுக்கு முன்னுல் இருந்த பெரிய பங்க ளாவைத் தனக்கு சொந்தமாக்கிக் கொண்டார். தனது 'பிருந்தாவன விளையாட்டு'க்கென்றே அதை அவர் வாங்கி யிருந்தார். இரவு நேரத்தில் அந்த பங்களா 'கோகுல'மாக மாறி கோலாகலத்துடன் காட்சியளிக்கும்.

பட்டணத்தில் படிப்பை முடித்துக்கொண்டு ஊர் திரும் பிய சுந்தரேஸ்வரரின் மகன் சுகுமாரன், சமீப நாட்களாக அந்தப் பங்களாவிலே பகல் பொழுதை கழித்துக் கொண் டிருந்தான். அவன் தந்தையைப்போல அல்ல. அடக்கமான குணமும், நல்ல நடத்தையும் உள்ளவன். தன்னைப் போன்ற சில நண்பர்களைக் கூட்டிவைத்துக் கொண்டு அரசியல். இலக்கியம், முதலியவைகளைப் பற்றி விவாதம் செய்வான். அரட்டை அடிப்பான் மற்ற நேரங்களில் புத்தகங்கள் படிப் பதில் காலத்தைக் கழிப்பான்.

அன்று வழக்கத்துக்கு மாருக காலையிலேயே வந்தான். அங்கே மேல் மாடியிலிருந்து கீழே இறங்கும்போது அவ னுடைய விழிப்பார்வை, எதிர்ப்புறத்தில் உள்ள வீட்டு வாச லின் முன்னுல் நின்றுகொண்டிருந்த ரோஜாவின்மேல் போய் விழுந்தது. அப்படியே தன்னுணர்வற்று நின்று விட்டான். ரோஜாவின்மேல் பதித்திருந்த தன் விழிகளை அவன் எடுக்கவே யில்லை.

சிலைபோல் நின்று கொண்டு தன்னையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்ற சுகுமாரனை கண்டதும், அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அடக்கி அடக்கிப் பார்த்தாள் முடியவில்லை. அதை புன்னகை வழியாகப் போக விட்டாள். அடுத்த விநாடி வெட்கம் அவளை வந்து மோதிற்று. விழிகளால் ஒரு பார்வையை அவன் மேல் வீசி யெறிந்துவிட்டு, 'விர்' ரென்று உள்ளே சென்றுவிட்டாள்.

சுகுமாரனுக்குச் சொர்க்கத்தை எட்டிப் பிடிப்பது போன்ற உணர்ச்சி எங்கும் பரவியது. உள்ளத்தில் ஒருவித பரபரப்பும், உணர்ச்சிகளில் ஒருவித இனிப்பும் சேர்ந்து, அவனை நிலைதடுமாற வைத்தன. இந்த வண்ணப் புரு யார் ? இந்த வண்ணப் புரு யார் ?'-என்ற கேள்வி அவன் உள்ளத்தில் குதித்துக் கொண்டிருந்தது.

அன்று முதற்கொண்டு, தன் நண்பர்களை யெல்லாம் அங்கு வராமல் செய்துவிட்டான். அவன் மட்டும் ரோஜாவைப் பார்த்து ரஸிப்பதில் பகல் பொழுதைக் கழிக்கலானான். உலகத்திலுள்ள அத்தனை அழகும் ஒன்று சேர்ந்து ரோஜாவாக உருவெடுத்து, தன் எதிரே காட்சியளிப்பது போலிருந்தது நான்கு விழிகளும் பலதடவை ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டன. அவர்களுடைய இதயத்திலே ஓடித் திரியும் எண்ணங்களை அப்படியே எதிரொலித்துக் காட்டின. அவள் புன்முறுவல் பூப்பாள். அவனும் இதழ்களை விரித்துக் காட்டுவான். இப்படி எத்தனை நாட்களுக்கு இருக்க முடியும் ?

தினமும் தன்னையே தரிசனம் செய்யும் சுகுமாரனின் கண்கள் இதற்குமுன் போகாத ஒரு விசித்திர உலகத்துக்கு தன்னை அழைக்கின்றன என்று அவள் உணர்ந்தாள். சுகு

மாரனின் புன்முறுவல், அவளது உள்ளத்தில் துள்ளிக் கொண்டிருந்த இனிய உணர்வுகளைத் தழுவுவது போலிருந்தது. இரவு நேரங்களில் படுக்கைகூட நெரிஞ்சிபோல குத்தியது. முத்தத்தில்போய் நின்றுகொண்டு, வான முகட்டிலே தொங்கும் வண்ண நிலாவைப் பார்த்துப் பெருமூச்செறிவாள். இப்படி எத்தனை நாட்களுக்கு இருக்க முடியும் ?

மணி மூன்றிருக்கும். வழக்கம்போல் வாசலில் வந்து நின்ருள் ரோஜா. அவள் தரிசனத்துக்காக ஏற்கனவே காத்துக் கொண்டிருந்த சுகுமாரன், அவளைக் கண்டதும், விறு விறு என நடந்து அவளிடம் சென்ருன். தன் பக்கத்தில் வந்து நின்ற சுகுமாரனைப் பார்த்த ரோஜாவுக்கு உடலெல்லாம் நடுங்கத் துவங்கியது. விழிகள் மிரள, அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டே, "போய்விடுங்கள் ! போய் விடுங்கள்!" என்ருள்.

"நான் போகிறேன். ஆனுல் நீயும் என் பின்னுல் வர வேண்டும். ஐந்து நிமிடம்தான் ; அப்புறம் நீ வந்து விடலாம் !"—என்று சொல்லிக்கொண்டே அவளுடைய கரத்தை இறுகப் பற்றினுன். அந்த ஸ்பரிசம் ஏற்பட்டதால் ஒரு இன்ப உணர்ச்சி அவள் உடலெங்கும் ஊடுருவிப் பாய்ந்தது. ஒருவித மனமயக்கம் ! யாரும் பார்த்துவிடுவார்களோ என்ற பயம் ஒரு பக்கம்: ஆனுல், அவன் பிடியிலிருந்து தன் கரத்தை விடுவித்துக்கொள்ள மனமில்லை. இந்த நிலையில் இரண்டு நிமிடங்கள் கழிந்தன.

"என்ன வருகிருயா ?"

"சரி"—என்று அவள் தலையை ஆட்டினுள். தான் பிடித்திருந்த அவள் கையை விட்டுவிட்டு வேகமாக வீதியைத்

தாண்டி தன் வீட்டுக்கு வந்தான். சில நிமிடங்களுக்குள் ரோஜாவும் அங்கு வந்துவிட்டாள். அவளை அழைத்துக் கொண்டு ஒரு அறைக்குள் சென்றுள். அங்கே ஒரு மெத்தையுடன் கூடிய கட்டிலொன்று கிடந்தது. அதில் உட்காரச் சொன்னுன். ரோஜா அமர்ந்ததும் சில விநாடிகள் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"ஏன், என்னை இப்படிப் பார்க்கிறீர்கள்?"

"உன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதில் எவ்வளவு இன்பம் இருக்கிறது?"

"இதற்குத்தானு கூட்டி வந்தீர்கள்?"

"இதற்குந்தான்....!" என்று சொல்லி அவள் இதழ்களுடன் தன் இதழ்களைப் பொருத்தினுன். அதிலே பிறந்த ஒரு உணர்ச்சிப் பொறி, ரோஜாவை கிறு கிறுக்க வைத்தது, அதிலே எத்தனை இன்பம்! எவ்வளவு புதுமை!

"சரி, சரி விடுங்கள். நான் போக வேண்டும். யாரும் பார்த்துவிடுவார்கள்!"

"இது என் மாளிகை! என் உத்திரவின்றி யாரும் பிரவேசிக்க மாட்டார்கள்."

"இந்த மாளிகையையே நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொள்ளுங்கள். என்னை மட்டும்....!"–குறும்பாகக் கூறினுள் ரோஜா.

ஐந்து நிமிடங்கள் என்று கூறித்தான் ரோஜாவை அழைத்து வந்தான். அரைமணி நேரமாகிவிட்டது. நேரம் போனதே தெரியவில்லை. கடைசியாக, 'இச்' சென்ற சப்

தத்துடன் பிரிந்தார்கள். ரோஜா தான் மட்டும் வீட்டுக்கு வரவில்லை : தன்னுடன் சுகுமாரனின் நெஞ்சையே கொண்டு வந்துவிட்டாள். ரோஜாவின் இதயக் கண்ணாடியிலே சுகுமாரனின் முகம் !

பருவக் குளத்தில் நீந்தும் ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்த்து மனதை விம்மலுக்கு ஆக்குவது, அர்த்தமில்லாத கற்பனைகளை எண்ணுவது....அப்புறம் ....—? விம்மலின் காதல், காதலின் கற்பனை, கற்பனையின் உளறல்கள். உளறல்களின் அசட்டுத் தனங்கள் – இப்படியெல்லாம் நடக்கும் ! இயற்கையின் விசித்திர விளையாட்டு இது. இந்த விளையாட்டுத்தான் நடந்து கொண்டிருந்தது சுகுமாரனுக்கும் ரோஜாவுக்குமிடையே.

ஆனந்தமான அணைப்பு, அள்ளிப் பருகும் இதழ்தேன்: கொஞ்சும் விளையாட்டு, இன்னும் வேடிக்கை........!

" குமார்........!"

" ரோஜா !"

" நீங்கள் பேசுவது கரும்புபோல இருக்குது !"

நீ பேசுவது மட்டும் ?—செடியிலிருக்கும் ரோஜா மணத்தை மட்டும் தான் தரும் : இந்த ரோஜாவோ, தேனையும்: தருகிறது இன்பத்தையும் தருகிறது. நீ ஒரு விந்தை ரோஜா கண்ணே !

" நீங்கள் இப்படித்தான் பேசிப் பேசி.......!"

" தென்றல் வரும்போது குளுமையைக் கொண்டு வரும் : வானத்து நிலா வரும்போது அழகை அழைத்து

வரும். நீ அப்படியல்ல. இனிமையையும், மகிழ்ச்சியையும், உணர்வையும் கூடவே கொண்டுவருகிறாய்."

"நீங்கள் பேசுவது மட்டும் புதுமையல்ல, நான் இப்போது இருக்கும் நிலையும் புதுசு !"

ஆம், ரோஜாவுக்குப் புதுசாகத்தான் இருந்தது. சுகுமாரன் பேசியதை அவள் புரிந்து கொள்ள. அவனைப்போல் கதைகள், கவிதைகள் படிக்கவில்லை அவள். ஆனால், அவளுடைய மனதிலே பொங்கி யெழும் புதுப் புதுப் பூரிப்பின் வாலிப்பிலே தன்னை மறந்து உட்கார்ந்திருப்பாள். அவள் இதயத் தட்டிலே வெடித்துக் கொட்டப்பட்டிருக்கும் புது இன்பத் தேனை சுவைப்பதிலேயே தன்னை மறந்துவிட்டாள். மீண்டும், மீண்டும் அதை அருந்த வேண்டும் என்ற ஆசை வளர்ந்துகொண்டே இருந்தது. இதற்குமுன் அவள் இந்த இன்பச் சுவையை அனுபவித்ததே யில்லை. அவளுடைய நினைவு ஏன் சுகுமாரனைச் சுற்றிச் சுழலாது ?

* * *

## 3

முதல் நாள் திடிரென்று வெளியூர் போக வேண்டி வந்து விட்டது சுகுமாரனுக்கு. ரோஜாவுக்குச் சொல்லி விட்டுப்போக சந்தர்ப்பமில்லாது போய்விட்டது அவனுக்கு.

அவனை எதிர்பார்த்து, பங்களா ஹாலில் உள்ளே இருக்கும் அறையில், ஒரு மேசைமேல் உட்கார்ந்து, கால்களைக் கீழே தொங்கப்போட்ட வண்ணம் ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள் ரோஜா. அது சமயம் 'அகஸ்மாத்தாக' அங்கு வந்த சுந்தரேஸ்வரர், அவளைப் பார்த்தார். அப்

படியே சிலையாக நின்றுவிட்டார். அழகின் அத்தனைப் பூரணப் பொலிவின் குவியல்கள் ஒன்று திரண்டு உருவெடுத்து உட்கார்ந்திருப்பது போலிருந்தது. தேய்த்துத் துலக்கப்பட்ட பித்தளைப் பாத்திரம்போல் 'தகதக' என்று மின்னிக் கொண்டிருந்த மேனி, ஒட்டு மாம்பழம் போல் 'தளதள' என்றிருந்த கன்னங்கள், புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்த பூங்கரங்கள்—எல்லாம், அவருடைய உடலெங்கும் புல்லரிப்பை உண்டாக்கின. உணர்ச்சியைக் கிளறின. அவருடைய உள்ளத்திலே நீரோடையின் சத்தம் கேட்கத் துவங்கியது. அறைக் கதவின் ஓரத்திலிருந்தபடியே அவளுடைய அழகை அள்ளிப் பருகிக்கொண்டிருந்தார் சில நிமிடங்கள். 'புதுத்தேவதை' இங்கு எப்படி வந்தாள் ?—ஏன் வந்தாள் ? எப்போது வந்தாள் ? யாரைதேடி வந்தாள் ? யார் இவள் ? — என்ற கேள்வி அலைகள் அவர் உள்ளக்கடலிலே வாரி அடித்துக் கொண்டிருந்தன.

சுந்தரேஸ்வரர் வந்ததை ரோஜா கவனிக்கவில்லை ! சுகுமாரனைக் காணோமே....? வந்துவிடுவார்....! அதுவரையிலாவது இந்தப் புத்தகத்தைப்படித்துக் கொண்டிருப்போம் என்று அந்த ஏட்டைப் படித்துக் கொண்டிருந்தவளின் கண்களைச் சுந்தரேஸ்வரரின் கனைப்பு அப் புத்தகத்திலிருந்து அகற்றிற்று. எதிரே ஒரு 'பெரிய மனிதர்' நிற்பதைக் கண்டதும், திடுக்கிட்டுவிட்டாள் ரோஜா. அவர் சுகுமாரனின் தந்தை யென்பதை அவள் அறியமாட்டாள். அவரைப் பார்த்ததே யில்லை. தான் அங்கே இருப்பதை அவர் பார்த்துவிட்டார். அவர் யார் ?....சிந்தனையும் கேள்வியும் அவளைக் குழப்பின. நெஞ்சு படபட என்று அடித்துக் கொண்டது. சடேரென்று கீழே இறங்கிவிட்டாள்.

"நீ யாரம்மா ?"

சுந்தரேஸ்வரரின் இக்கேள்விக்குப் பதில் ஒன்றும்சொல்லாமல் அவரைப் பார்த்தாள் ரோஜா, அவர் முகத்தில் கடுமை ஒன்றுமில்லாமல், சாந்தத்துடன் இருப்பதைக்கண்டதும்சிறிது தைரியம் உண்டாயிற்று. ஆனால், பதில் ஒன்றும் பேசாமல் மௌனமாக நின்றாள்.

"என்ன, நான் கேட்ட கேள்விக்கு....?"

"நீங்கள் என்ன கேட்டீர்கள் ?"

"நீ யாரென்று கேட்டேன்"

"எதிர் வீட்டிலிருப்பவள்"

"அது மாதவனின் வீடல்லவா ?"

"ஆமாம் ; அங்குதானிருக்கிறேன்"

"அப்படியா ! எனக்கு இதுவரை தெரியாதே ! எனக்குக் கூடச் சொல்லாமல் கலியாணம் செய்து கொண்டான் போலிருக்கு !"

ஆச்சரியமும், கிண்டலும் கலந்து வந்த இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ரோஜாவுக்கு, ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆனல் அதை அவர்மேல் பாய விடவில்லை.

"அவர் இன்னும் கலியாணம் செய்து கொள்ளவில்லை"

"அப்போ நீ....?"

"அவர் தங்கை !"

"மாதவனின் தங்கையா! அடடே எனக்குத் தெரியாதே. நீ அவன் மனைவியாக்கும் என்று தவருக நினைத்துவிட்டேன்"—என்று சொல்லிவிட்டு ஒரு அர்த்தம் நிறைந்த சிரிப்பை அவள்மீது வீசினுர். அந்தச் சிரிப்புடன் அவருடைய விழி வீச்சும் ஒரு 'தினுசு'டன் அவள் மேல் பாய்ந்தன. இந்தத் 'தினுசு தேகத்தின் சுவை நினைப்பை வெளிக்காட்டுவது என்பதை ரோஜா எப்படி அறிவாள். கண்களை நிலத்தில் பாயவிட்டு கால் விரல்களால் நிலத்தில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

"இங்கே யாரைத்தேடி வந்தாய்?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது கஷ்டமாக இருந்தது அவளுக்கு. ஓடிவிடலாமா என்று கூடத் தோன்றிற்று.

"சுகுமாரனைத் தேடித்தானே வந்தாய்?"

பளிச்சென்று வந்த இக்கேள்வி ரோஜாவை மோதியதும் விழிகளை அகல விரித்து அவரைப் பார்த்தாள். அவள் தலை 'ஆமாம்' என்று ஆடிற்று.

சுந்தரரின் வாயில் மலர்ந்து நின்ற புன்னகை சுருங்கியது. 'இந்த மடலன்னம் என் மகனிடம் சிக்கிவிட்டது!' என்று நினைத்துக்கொண்டே, "உன் பெயரென்ன?"—என்ருர்.

"ரோஜா!"

"ரோஜாவா....! விசித்திரமான பெயர்! உன்னைப் போலத்தான் பேரும் இருக்கு, ரோஜாவும், நீயும்ஒன்று தான்" என்று கூறிவிட்டு ஏதோ நினைத்தவர்போல் உள்ளே சென்ருர். இதே சமயம் வேலைக்காரன் மாரி அங்கே வந்தான்.

ரோஜாவைப் பார்த்த அவன் "சின்ன எஜமான் ஊரிலே இல்லீங்களே.........!"—என்ருன். ரோஜா இதைக் கேட்டதும் வியப்பால் விழிகள் விரிய அவனைப் பார்த்தாள்.

மாரிக்கு, சுகுமாரன்-ரோஜா விஷயம் தெரியும். எனவே அவன் அப்படிச் சொன்னுன்.

" எப்போது வருவார் ?"

"ஒரு வாரத்தில் திரும்பிவிடுவதாகச் சொன்னுர்."

" வேறென்றும் சொல்லவில்லையா ?"

"நீங்க இங்க வந்தா, இதைத் தெரிவிக்கச் சொன்னுரு!"

இந்தச் சமயத்தில் உள்ளேபோன சுந்தரேஸ்வரர் திரும்பவும் அங்கு வந்தார். அவரைக் கண்டதும், மாரிக்கு நடுக்கம் ஏற்படத்துவங்கியது. மிரள மிரளப் பார்த்துக் கொண்டே நழுவினுன்.

" டேய் மாரி........!"–சுந்தரேஸ்வரர் அவனை அழைத்தார்.

" என்னங்க எஜமான்.....!"- தொண்டையில் வார்த்தைகளை விழுங்கினுன்.

ரோஜாவுக்கு அப்போதுதான் புரிந்தது, அந்த மனிதர், சுகுமாரனின் அப்பா என்று. பயத்தினுல் அவள் உடலெங்கும் நடுங்கத் துவங்கியது. அதற்குமேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. மின்னல்போல் அங்கிருந்து மறைந்து விட்டாள்.

அவள் போன திக்கையே பார்த்துக்கொண்டு நின்ற சுந்தரேஸ்வரர் பின்னல் திரும்பினர். அச்சத்தினல் விழிகள் மிரள அடக்க ஒடுக்கமுடன் நின்று கொண்டிருந்தான்.

" மாரி, இவள் இங்கே எத்தனை நாளா வந்து போகிருள் ?"

" ஒரு மாசமாக !"

" சுகுமாரனும் இவளும்....?– சுந்தரேஸ்வரர் இப்படி இழுத்து நிறுத்தியதும். ஒரு அசட்டுச் சிரிப்பைச் சிந்த விட்டான் மாரி.

" என்னடா, நான் கேட்கிறேன், நீ சிரிக்கிறே ?"

" ஆமாங்க ஏஜமான்!" மென்று விழுங்கினன் வார்த்தைகளை "

" ஏண்டா எனக்குச் சொல்லலே ?"

சின்ன எஜமான் வந்த நாளிலிருந்து நீங்க இந்தப் பக்கமே-தலைகட்லையே....?

" சரி சரி போ....வேலையைப் பாரு போ....!"

மாரி உள்ளே சென்றதும் சுந்தரேஸ்வரரின் மூளை தீவிரமாக வேலை செய்யத் துவங்கியது.

* * *

## 4

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. சுந்தரேஸ்வரரின் நினைவும் ஓடிக் கொண்டிருந்தன ரோஜாவை நோக்கி. அவளுடைய அழகும், பருவமும், தோற்றமும், கட்டான உடலும்

சுந்தரேஸ்வரரின் உள்ளத்தைக் குத்திக் குடைந்தன. அந்த அஞ்சுகத்தின் சுகம் கிடைக்காவிட்டால் அயர்ந்த தூக்கம் நமக்கில்லை என்ற நிலையில் அவர் திணறிக் கொண்டிருந்தார். மகனின் ஆசைக் காதலியாயிற்றே என்று அவர் நினைக்க வில்லை, நமக்குக் கிடைக்க வேண்டியதை அவன் தட்டிப் பறிக்கிறனே—என்ற ஏக்கம்தான் அவரைப் பிடித்தாட்டியது. தன் திருக் குமாரனின் தோளிலும், மார்பிலும் விளையாடியவ ளாயிற்றே என்று அவர் நெஞ்சம் நினைக்கவில்லை. என் பஞ் சனைக் குரியவள் அவன் பக்கத்தில் இருப்பதா ? என்ற எண் ணம்தான் அவருள்ளத்தில் மிதந்தது. மகனின் மனைவியாக இருக்கவேண்டியதுக்குத் தாலி ஒன்றுதான் பாக்கி, அதுவும் சமூகத்தின் அங்கீகாரம் பெற, அந்த அளவுக்கு, அவள் மனைவி என்ற அந்தஸ்து உடையவளாகிவிட்டாள். அந்த மடலன்னத்தை நாம் மருவ நினைப்பது மாபாதகம், என்று அவர் நெஞ்சு சோகிக்கவில்லை. அவள் நினைவு அவரைச் சுட்டெரித்தது. நான் சுவைக்கவேண்டிய கனி. எனக்கு அவள் வேண்டும். மகனுயிருந்தாலென்ன, மாற்றுனுயிருந்தா லென்ன. அதில் பாபமொன்றில்லை. அதைப்பற்றிச் சிந்திக்க நேரமுமில்லை, அவசியமுமில்லை அவருக்கு. ஆம், இதுவரை அவர் அம் மாதிரி நினைத்திருந்தால் 'பிருந்தாவன' மாக இருந்திராது, அவரது வாழ்க்கை! அந்தக் கண்ணனின் மறு 'அவதார'மாகி 'கோகுலம்' நடத்தியிருக்கமாட்டார். அவ ருக்கு வேண்டிய உல்லாசத்துக்கு—இன்பத்துக்கு—எதுவுமே, இந்தப் பெயரிலுமே குறுக்கே வந்து நிற்கக்கூடாது நின்ற தும் கிடையாது. இந்தச் சமுதாயத்தின் செல்லப்பிள்ளைகள் சீமான்கள். இச் செல்லப்பிள்ளைகளை உல்லாசத்திலே உரு வாக்கி வளர்த்து, வாழ்க்கையை அவர்களுக்குக் கேளிக்கைக் கூடமாக்கிக் கொடுத்திருக்கிறது. அவர்கள் விளையாடுகிறுர்

கள். அந்த விளையாட்டிலே, ஒழுங்கு, ஒழுக்கம்-முறை எல்லாம் கேலிக்கூத்தாக்கப்படுகின்றன. தடைக் கற்களாக நிற்கும் அவைகள், அவர்களால் நொறுக்கித் தூள் தூளாக்கப்படுகின்றன. சமுதாயத்தின் நேர்மை, நீதி, நியாயம், ஒழுங்கு எல்லாம் அவர்களால்தான்-உயர்ந்தவர்கள் 'பெரிய மனிதர்கள்' என்று சொல்லப்படுகின்ற ஆண்களால்தான்—நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால், அவர்களுடைய வாழ்க்கை அதற்கு நேர்மாருகச் சுழலுகிறது. அப்படிச் சுழலக்கூடிய முறையிலே அவர்களின் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறது. இதுதான் இன்றிருக்கும் சமுதாய அமைப்பின் விசித்திரப் பண்பு! பணம், அவர்களுக்குப் பணியாள்! அவர்களுடைய எந்தவிதமான எண்ணத்தையும் செய்து காட்டும் அற்புதக் கருவி! ஆம், அதனால்தான் அவர்களுடைய அருவருப்பான எண்ணங்கள்-ஆசாபாசமான நினைப்புக்கள் அந்தப்புரத்திலே. இன்ப விளையாட்டுகளாக மாறி நடமாடுகின்றன. பாங்குகளிலே கரன்ஸி நோட்டுகளாக—கணக்குச் சிட்டைகளாக அடைபட்டுக் கிடக்கின்றன. அவர்களுடைய அழுகிய பாழ்பட்ட இதயங்கள் அங்கே ஓடித்திரியும் எண்ணங்கள்—'பெரிய மனுஷத்தனம்' என்ற திரையினல் மறைக்கப்படுகின்றன! சுந்தரேஸ்வரரும் அந்தச் செல்லப்பிள்ளைகளில் ஒருவர்தான். அவருடைய உள்ளத்திலும், உடலிலும் ஊறிப்போன உல்லாசப்பண்பு—வரைமுறை யில்லாத வகையிலே ஆனந்தம், அனுபவித்ததன் விளைவால் உண்டான உல்லாசப் பண்பு-இதுவரை நடந்துவந்த பாதையில் அவருடைய அடிச்சுவட்டை மறக்க வைக்கவில்லை. ஆகவேதான், சுகுமாரனுக்கும்-ரோஜாவுக்கும் உள்ள தொடர்பை அவர் எண்ணவில்லை. மகனுக்கும் தனக்கும் உள்ள உறவைச் சிந்தித்துப் பார்க்கவில்லை. மகனுக்கு எதிராக, வில்லனாக மாறிவிட்

டார். ரோஜாவை நமக்காக்கிக் கொள்ளவேண்டும் என்ற போட்டி மனப்பான்மை உண்டாகிவிட்டது. அவன் உலகம் தெரியாதவன். இவளைப்போல் இன்னொரு கூட்டு முல்லையை அவனுக்குக் கலியாணம் செய்து வைத்துவிட்டால்போகிறது என்ற நொண்டிச் சமாதானம், அவர் மனதுள் !

அவர் ரோஜாவை அடைய வழியைத் தேடினார். அது அவருக்குக் கஷ்டமாகத் தெரியவில்லை. மாதவன் அவருடைய பஸ் கம்பெனியில்தான் டிரைவராக வேலை பார்த்து வந்தான். ஆகவே, அவனைப் பிடித்தால் காரியம் கைக்கூடி விடும். எனக்கு மனைவியாக்கிவிடு என்றால் முடியாதென்று சொல்லிவிடப் போகிறானா ? முதலாளி யென்பதல்ல, முக்கியம். பணச்சோலையில், பொன் ஊஞ்சல் கட்டி அவளை ஆடவைப்பேன் என்பதை அவன் அறிந்திருப்பதால்....!

தீர்மானம், திட்டம்—எல்லாம் உருவாகிவிட்டது. சுகுமாரனை அந்தப் பங்களா பக்கம் தற்போது வரவிடக்கூடாது என்ற நோக்கத்தில் ஒரு வேலையைச் சொல்லி பம்பாய்க்கு அனுப்பிவிட்டார். அவன், தான் இரண்டு மாதத்துக்குள் மீண்டும் சந்திப்பதாக ரோஜாவுக்குக் கடிதம் எழுதிவிட்டுப் போய்விட்டான்.

* * *

## 5

ஒரு நாள் மாதவனைத் தன் வீட்டுக்கு அழைத்திருந்தார் சுந்தரேஸ்வரர். ஏதோ பஸ் கம்பெனித் தகவலை அறிய அழைக்கிறார் போலிருக்கு—என்று எண்ணிக்கொண்டு

மாதவன் சென்ருன் அவர் மாளிகைக்கு. ஆனுல், வழக்கத்துக்கு மாருக, பலமான உபசரிப்புகள் தனக்கு நடப்பதைக் கண்டதும் ஆச்சர்யம் தாங்க முடியவில்லை. பல எண்ணங்களும், கேள்விகளும் அவன் உள்ளத்தில் படை யெடுத்தன. எதையும் காட்டிக்கொள்ளாமல் வழக்கம்போல் மரியாதையாக, ஒரு ஓரத்தில் நின்று கொண்டிருந்தான்.

"ஏன் நின்னுக்கிட்டிருக்கே அப்படி உட்காரு!"— சுந்தரேஸ்வரர் சோபாவைக் காட்டினுர். அவன் அமர்ந்தான்.

"உன்னிடம் ஒண்ணுகேட்கணும்னு வெகுநாளா நினைச்சுக்கிட்டிருக்கேன். எல்லாம் நல்ல சமாச்சாரம்தான்!"

பேச்சைத் துவங்கினுர் சுந்தரேஸ்வரர். கேள்வியை விழிகளால் வீசினுன், மாதவன்.

"உனக்கு ஒரு தங்கச்சி இருக்கிருள் அல்லவா?"

"ஆமாம்...!" வியப்பால் விழிகள் விரியச் சொன்னுன்,

"அவளை நான் பார்த்திருக்கிறேன். அந்தப் பெண்ணை நீ தங்கையாகப் பெற்றது அதிர்ஷ்டந்தான்!"

மேசைமேல் இருந்த டீ கப்பிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது. ஒரு கப்பை எடுத்து மாதவனுக்கு நீட்டினுர். சுந்தரேஸ்வரரின் அந்த வாக்கியம்—அந்தப் பெண்ணை நீ தங்கையாக பெற்றது அதிர்ஷ்டந்தான் என்ற வாக்கியம்— அவனுடைய உள்ளத்தில் பாய்ந்து மகிழ்ச்சிப் பெரு வெள்ளத்தை வாரியிறைக்க, அவர் நீட்டிய டீ கப்பை வாங்கினுன்.

சுந்தரேஸ்வரரும் தேனீரை ஒரு மடக்குக் குடித்து விட்டு, டீ கப்பை மேசைமேல் வைத்தார். "அவளுக்குப் பெயர் ரோஜா! அழகான—அர்த்தம் நிறைந்த – பெயரைத் தான் வைத்திருக்கிருய்!"

முதலாளியின் இந்தப் பாராட்டுதலைக் கேட்டதும், அவன் பல்லெல்லாம் வெளியே வந்தது.

"அந்த ரோஜாவை வாடாமல் கருகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்!"—என்று சொல்லிவிட்டு ஒரு அர்த்தம் நிறைந்த பார்வையை அவன் மீது விட்டெறிந்தார்.

"ஆமாம்!" என்று மென்று விழுங்கினுன் வார்த்தை களை. சுந்தரேஸ்வரரின் பார்வை அப்போது, அவனது உள் ளத்தைத் துளாவிக் கொண்டிருந்தது. தான் சொல்ல வேண்டிய விஷயத்துக்கு அத்திவாரம் அமைத்தாய் விட் டது! இனி—

"அவளை............!"

மாதவன், அவரை உற்றுப் பார்த்தான்.

"நான் திருமணம் செய்யத் தீர்மானித்து விட்டேன்!"

இந்த வாசகம் அவருடைய வாயிலிருந்து வந்ததுதான் தாமதம், அயர்ந்த தூக்கத்தில் உள்ளவனின் மேனியில் கொதி தண்ணீர்பட்டால் எப்படி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுவாஞே, அதுபோல துள்ளியெழுந்தான்.

"என்ன சொன்னீர்கள்....?"

மாதவன் துடித்தெழுந்து, வினுவைத் தன்மேல் வீசி யெறிந்ததைக் கண்டு, சுந்தரேஸ்வரர் அதிர்ச்சியடையவில்லை.

மனம் தளரவுமில்லை. அதற்கு மாறாக, மெதுவாகச் சிரித்துக் கொண்டே, "ஏன் துள்ளி யெழுகிறாய் ?" உனக்கு ஆச்சர்ய மாகத்தான் இருக்கும்....! உட்கார்....! ரோஜாவை நான் மணமுடிக்க வேண்டும். அந்த ரோஜா வாடாமல், கருகா மல் இருக்க வேண்டுமானால் அவள் என் மனைவியாக இருக்க வேண்டும் ! ஆமாம்...அவள் என் மனைவியாக இருக்க வேண்டியவள்தான்....!"—என்றார்.

மாதவனுக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. அவர் இப்படி பேசுவாரென்று அவன் எதிர்ப்பார்க்கவில்லை. தன் தங்கைக்குரிய கணவனை அவன் வேறு முறையில் சித்த ரித்திருந்தான். அவளுடைய அழகுக்காக பலர் படையெடுப் பார்கள். பணமுள்ளவர்கள்கூட வலை வீசலாம்—என்பதை அவன் முன் கூட்டியே எதிர்பார்த்துத்தான் இருந்தான். ஆனால், அழகு, கல்வி, செல்வம்—இம் மூன்றும் உள்ள ஒரு இளம் காளைக்குத்தான் தன் தங்கையைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தான். ஆனால், சுந்தரேஸ்வரர்—?

அவர் அப்படிக் கேட்டதைப் பற்றி அவன் கோபப்பட வில்லை. ரோஜாவின் அழகின்மேல் ஏற்பட்ட ஆசை அது. ஆனால் பணம் மட்டும்தான் சுந்தரேஸ்வரருக்கு இருந்தது. அவருக்குத் தன் தங்கையைக் கொடுப்பதால்—தான் சித்த ரித்து வைத்திருந்த கனவு சிதறுவதுபோ லிருந்தது.

சிந்தனையில் மூழ்கிக்கிடந்த மாதவனை கவனித்தார் சுந்தரேஸ்வரர் ! "என்ன ஆழ்ந்த யோசனை ?"

"முடியாது ! என் தங்கையை உங்களுக்கு மனைவி யாக்க முடியாது ! ஒருக்காலும் முடியாது ! என் உயிருள்ள

வரை அது நடக்காது! நான் அவளை வாழவைக்க விரும்புகிறேன். சாக வைக்க விரும்பவில்லை"—மாதவன் கூவினன். அவன் உடல், உணர்ச்சி வசத்தால் பட படத்தது.

சுந்தரேஸ்வரர் ஆத்திரப்படவில்லை. மெதுவாக அவன் அருகே சென்ருர். "அவள் ஏன் சாகவேண்டும் மாதவா? அவள் வாழவேண்டிய இடம் என்னுடைய மாளிகைதான். சுகமாக. சொகுசாக இருப்பாள். எல்லா வசதிகளும் இருக்கின்றன. என்னதான் இங்கு இல்லை?"

"ஆம், எல்லாம் இருக்கின்றன. வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் அத்தனையும் இருக்கின்றன. ஆனல், என் ரோஜாவுக்கேற்ற புருஷன்மட்டும் இங்கு இல்லை! அவள் உங்களுக்கு மனைவியாக்கப்பட்டால் அவளுடைய வாழ்க்கை சொர்க்கமாக இருக்காது! சுடுகாடாக இருக்கும். அங்கே என் ரோஜாவின், சதைகளை விட்டகன்ற ஆசைக் கனவுகளான எலும்புகளைத்தான் காண முடியும்! என்னல் முடியாது! ஒருக்காலும் முடியாது!" உணர்ச்சிப் பொறிகளை அள்ளி விதைத்துக்கொண்டு மாதவனிடமிருந்துபுறப்பட்டன வார்த்தைகள். அவன் அதற்குமேல் அரைக்கணம் கூட நிற்கவில்லை. 'விர்' ரென்று வெளியே வந்துவிட்டான். சுந்தரேஸ்வரர் அவன் போன திக்கைப் பார்த்துக் கொண்டு அப்படியே நின்ருர்.

* * *

## 6

சுகுமாரனுக்கும்—ரோஜாவுக்கும் உள்ள காதலை மாதவன் அறியமாட்டான். ரோஜா சொல்லவில்லை. ஒருவித

பயம் அதைத் தடுத்துவிட்டது. தன் அண்ணனுக்குச் சொல்லாமல் வைத்திருந்த ரகசியம் இது ஒன்றுதான். சுகுமாரன் வரும் நாளை அவள் எண்ணிக்கொண்டிருந்தாள்.

மாதவன் சுந்தரேஸ்வரரின் விஷயத்தை அவளுக்குத் தெரிவிக்கவில்லை. அதைக் கேள்விப்பட்டாலும், அவள் குழந்தை உள்ளம் கலங்கும். வேதனைப்படுவாள் என்று சொல்லாமலே விட்டான். ஆனால், சுந்தரேஸ்வரரின் அடுத்த அம்பு தன் மேல் வந்து பாயும் என்று எதிர்பார்த்துத்தான் இருந்தான். அவன் எதிர்பார்த்திருந்த மாதிரியே, அவனுடைய வேலைக்கு 'நோட்டீஸ்' வந்து விட்டது. சுந்தரேஸ்வரரால் உடனடியாகச் செய்ய முடிந்தது அது ஒன்றுதான். பய நம்மை மதிக்காமே, ஏதேதோ உளறிக் கொட்டிவிட்டுப் போய்விட்டானே பார்க்கிறேன் ஒரு கை! என்று உறுமிக் கொண்டிருந்த அவருடைய உள்ளத்தில், ரோஜாவின்மேல் உள்ள ஆசைக் கனவும் கனிந்து எரிந்துகொண்டுதான் இருந்தது.

வேலை போய்விட்டதைப்பற்றி அவன் கவலை கொள்ளவில்லை. ரோஜாவுக்காக எந்த கஷ்டத்தையும் தாங்க அவன் சித்தமாக இருந்தான். அவளைக் காப்பாற்றத் தன்னால் முடியுமென்ற நம்பிக்கை அவனுள்ளத்தில் வேரூன்றி யிருந்தது. ஆனால், அந்த நம்பிக்கையில் பெரிய அடி வந்து விழுந்தது. ஆம், மாதவன் திடீரென்று படுக்கையில் நோயாகப் படுத்துவிட்டான். நாள் ஆக, ஆக, நிலைமை மோசமாகிக் கொண்டு வந்தது. பதறி விட்டாள் ரோஜா. திகிலும் திகைப்பும் அவளைத் திணற அடித்தன. ஓடிப்போய் டாக்டரைக் கொண்டுவந்து காட்டினாள். " அபாயகரமான கேஸ் '

நல்ல இரத்தமில்லை....இருதயப் பலவீனம்....நல்ல உணவு வேண்டும்......நிறைய ஓய்வு வேண்டும்......என்று எதை யெல்லாமோ அடுக்கிக் கொண்டு போனார் டாக்டர். ரோஜா வுக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. டாக்டருக்குப் பணம்? அவர் ஆலோசனைப்படி நடந்து கொள்ளப் பணம்? அவள் நெஞ்சிலே இதே கேள்விதான். அழுது அழுது அவ ளுடைய விழிகளும் வீங்கிவிட்டன. மாதவன் படுத்ததி லிருந்து இந்த உலகமே இருண்டுவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டு விட்டது அவளுக்கு. மாதவன்மேல் அவள் வைத்திருந்த பாசம் அவளை நிலைகுலையச் செய்தது. மாத வன் இறந்து விட்டால்?—ரோஜாவால் அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. நெஞ்சு பயத்தினால் நடுங்கியது. எப்படியும் அண்ணா பிழைக்கவேண்டும். இந்தப் பிரச்னை தான் அவள் முன் வந்து நின்றது.

டாக்டரின் வாசகங்கள் ரோஜாவின் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. பேதை என்ன செய்வாள்? ஒன்றும் புரி யாது விழித்தாள், சுகுமாரன் இருந்தாலாவது அவனிடம் பணம் கேட்டு வாங்கலாம். அவனும் இல்லை. எப்போது வருவானோ—இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்போது சுந்தரேஸ்வரரின் நினைவு அவளுக்கு வந்தது.

சுந்தரேஸ்வரர் ரோஜாவை முதன் முதல் சந்தித்ததற் குப் பிறகு பல தடவை அவளை அழைத்து அன்புடனும் குழைவாகவும் பேசி தன் மேல் ரோஜாவைப் 'பக்தி' காட் டும்படி செய்து கொண்டிருந்தார். அவருடைய உள்ளத் தைப் பாடம் படிக்கச் சக்தியில்லாத ரோஜா அவரை நல்ல மனுஷர்—பெரியவர்—பணக்காரர் என்றுதான் எண்ணியிருந்

தாள். 'அவரிடம் போய் பணம் கேட்டால் என்ன ?' என்று எண்ணினுள். அந்த எண்ணம் அவளைச் சுந்தரேஸ்வரரிடம் கொண்டு வந்து விட்டது.

ரோஜாவைக் கண்ட சுந்தரேஸ்வரர் அவளை அன்புடன் வரவேற்ருர். அவளுடைய முகம் வருத்தமேலீட்டினுல் வாடிக் கிடந்ததைக் கண்டதும் அவர் உள்ளத்தில் கேள்வி ஏறி நின்றது.

"ஏன், ரோஜா உன் முகம் வாடியிருக்கு ?"

"அண்ணனுக்கு உடம்புக்கு ஆகலே. நோயாலே ரொம்பக் கஷ்டப் படருரு. டாக்டரிடம் காட்டினேன். அவர் சொல்வதைப் பார்த்தா....?"—அவள் கடை விழிகளில் நீர் துளிகள் தேங்கின.

'என்ன, மாதவனுக்கா உடம்புக்கு ஆகலே....! எனக்குத் தெரியாதே...!' என்று சொல்லிவிட்டு இரக்கப்படுவது போல் நடித்தார். அதே வேளையில், "நல்ல சமயமடா, இதை நழுவ விடுவாயோ....?" என்ற இசைத் தட்டின் ஒலி அவர் காதில் வந்து தாக்கிற்று. அவருடைய மனமும் இதை எதிரொலித்துக் கொண்டிருந்தது.

"சரி, டாக்டர் என்ன சொன்னுரு ?"

"அவரு சொல்றதை நினேச்சா...!"

"ஏன் தயங்கிறே, விஷயத்தைச் சொல்லு !"

"நிறையப் பணம் வேண்டும் போலிருக்கு !"

"என்னிடம் கேட்க வந்திருக்கிருயோ?"

"ஆம்" என்று தலையை ஆட்டினுள் ரோஜா.

"அண்ணன் சொல்லியனுப்பினுரா நீயாக வந்தாயா?"

"அவரு உணர்ச்சியில்லாமே கிடக்கிருரு. நானுகத் தான் வந்தேன்!"

நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டார் சுந்தரேஸ்வரர். அவருடைய மூளை மிக தீவிரமாக வேலை செய்தது. மாதவனுடைய மரணப் படுக்கையைத் தனது மஞ்சப் படுக்கையாக்கத் திட்டமிட்டார். ஏழை—எளியவர்களின் துன்பம் என்ற நிலத்திலே தங்களது இன்பமாளிகையைக் கட்டி வாழும் வஞ்சகக் கூட்டத்தாரின் வரிசையிலுள்ள அவர் நெஞ்சிலே நஞ் செண்ணம் முழு உருவத்துடன் பட மெடுத் தாடியது. உள்ளே சென்று இருநூறு ரூபாய் கொண்ட நோட்டுக் கத்தை ஒன்றை எடுத்து வந்து ரோஜாவின் கையில் கொடுத்தார். கொடுக்கும்போது சும்மா கொடுக்க வில்லை. ரோஜாவின் விரல்களைச் சுருட்டி மடக்கிக் கொடுத்தார். அதன் பொருளை அறிந்து கொள்வதற்கு அப்போதைய அவளுடைய மன நிலை சரியாக இல்லை. பணத்தை மகிழ்ச்சியுடன், வாங்கிக்கொண்டு நன்றி உணர்ச்சியுடன் அவரைப் பார்த்துவிட்டு வெளியே வந்தாள். சுந்தரேஸ்வரர் ஏதோ நினைத்தவர்போல் "ரோஜா....!" என்று கூப்பிட்டார். அவள் திரும்பினுள். "இங்கே வா!" என்ருர். அவள் மெதுவாக நடந்து வந்து அவர் எதிரே நின்ருள். சில விநாடிகள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார் சுந்தரேஸ்வரர் பிறகு, "உண்மையில் நீ ரோஜாதான்....!"—

என்று கூறிக் கொண்டே அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு தன் முகத்தை அவளுடைய கன்னத்தின் அருகே கொண்டுபோனார். ரோஜா தீயை மிதித்தவள்போல் திடுக்கிட்டு விலகினாள். அவள் விழிகளில் பயம் துள்ளிக் கொண்டிருந்தது. கையிலிருந்த நோட்டுக் கத்தை நழுவிக் கீழே விழுந்தது. மெய் வியர்க்க, அதையும், சுந்தரேஸ்வரரையும் மாறி மாறிப் பார்த்தாள். அந்தக் கரன்ஸிக் கட்டு அவளை பார்த்துச் சிரிப்பதுபோலிருந்தது. சுந்தரேஸ்வரரின் பார்வையிலே காமத்தின் விடை, அனல்போல் வீசிக் கொண்டிருந்தது. அந்த மாளிகையைச் சுற்று முற்றும் பார்த்தாள். சுகுமாரனின் முகம் அதில் பளிச்சென்று தெரிவதுபோல் ஒரு பிரமை! அவள் தலை சுழன்றது. கண்களில் நீர்வடிய மெதுவாகத் திரும்பி நடக்கத் துவங்கினாள். அவள் விழிகளிலிருந்து சிந்திய நீர்த்துளிகள் தரையில் அப்படியே யிருந்தன.

சுந்தரேஸ்வரர் அதுவரை பேசாமல் நின்றவர், அவள் திரும்புவதைக் கண்டதும், "ரோஜா, பணம் வேண்டாமா?" என்று கேட்டார். அவள் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வை, 'எனக்கல்ல—அண்ணனுக்கு!' என்று கூறுவது போலிருந்தது.

சுந்தரேஸ்வரர் கீழே கிடந்த பணத்தை எடுத்துக் கொண்டு அவளை நோக்கி வந்து கொண்டிருந்தார். இதே சமயத்தில் தன்னுடைய உடலெங்கும் நெருப்பால் சுடுவது போலிருந்தது, ரோஜாவுக்கு.

அருகில் சென்ற சுந்தரேஸ்வரர், "ரோஜா என்னை பித்தனாக்கிவிட்டயே! உன் அழகு என்னுள்ளத்தைக் குத்திக்

கொடைகிறது....!"—என்று சொல்லிக்கொண்டே மீண்டும் அவள் கரத்தைப் பிடித்தார்.

வெடுக்கென்று கையை உதறினுள் ரோஜா. அவளுடைய மென்மையான நரம்புகள் கூட ஆத்திரத்தால் விம்மின. கன்னமெல்லாம் கோபத்தில் மிளகாய் பழம்போல் சிவந்தன. சினம் புயலெனப் பாய்ந்தது. சீறினுள். "நல்ல மனுஷர் என்று நினைச்சேன். நெஞ்சிலே நஞ்சுதான் இருக்குது! என் தகப்பனைப்போல உள்ள நீங்கள் இப்படி நடந்து கொள்ள வெட்கமில்லே? இதுதான் பெரியமனுஷத்தனமோ? உதவி செய்ய இஷ்டமில்லாட்டி, உதைத்து விரட்டலாம். ஆனு, காசை ஒருகையில்வைத்துக்கொண்டு,கூட்டி அணைக்க மறு கையை நீட்டுவதுதான் உங்களைப் போன்றவர்களின் குணமோ ?—

சுந்தரேஸ்வரர் கல கல எனச்சிரித்தார். "நன்ருகப் பேசிறியே.......ஆனு, அனுபவம்தான் இல்லே?"

"ஆமா, அது இருந்தா உங்களோட இப்படிப் பேச அவசியமில்லே!"

"ரோஜா பணம் வேண்டுமானு, என்னைப் பரவசமாக்கவும் வேண்டும்!"—என்று சொல்லிக்கொண்டே அங்கே கிடந்த நாற்காலியில் 'தொப்' பென்று உட்கார்ந்தார்.

"உங்கள் மகளைப்போல உள்ளவள், உண்மையிலே உங்கள் மகனுக்கு மனைவியாகப் போகிறவள்........! அவருடைய உங்கள் மகனுடைய நல்லகுணத்துக்கும்.........

அவள் சொல்லி முடிக்கவில்லை. சுந்தரேஸ்வரர் இடை மறித்துப் பேசினுர். "ரோஜா, நீ நினைப்பது நடக்காது! சுகுமாரனின் காதலி – மனைவியாகலாம் என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டிருக்கிறே......அது நடக்காது: ஒருக்காலும் நடக்காது! நீ என் மாளிகைக்கு அரசிதான். ஆனுல் சுகுமாரனுக்கு மனைவியாகுவதன் மூலமாக அல்ல — உன் கழுத்தில் நான் தாலி கட்டுவதன் மூலமாக !

சீற்றமும், சினமும் துடிக்க அவரைப் பார்த்தாள் ரோஜா" உங்களுக்கு நான் மனைவியாக இருக்கவேண்டுமா?"

"ஆம், உன் அண்ணனிடம் அன்றைக்கே சொல்லி விட்டேன். ரோஜா, உன்மேல் எனக்கு நிரம்ப ஆசையுண்டு. உன்னை மணமுடிக்கத் தீர்மானித்து, அதை மாதவனிடம் கூறினேன். ஆனுல், அவன் முடியாதென்று மறுத்து விட்டான். இனி நான் அவனிடம் கேட்கப்போவதில்லை. நீ விரும்பினுல் எனக்கு மனைவியாக முடியும். இளவரசியைப் போல வாழலாம். ஆனுல் சுகுமாரனுக்கு மனைவியாக இருக்க நான் விடமாட்டேன். நீ சரி, என்று சம்மதம் கொடுத்தால், மாதவனைப்பிழைக்க வைக்கும் பொறுப்பு என்னுடையது. அதுமட்டுமல்ல, அவன் என் பஸ் கம்பெனிக்கு மானேஜர், மாளிகை வாசம், மங்காத இன்ப வாழ்வு அத்தனையும் அவனுக்கும் உண்டு. நீ எனக்கு மனைவியாக சம்மதத்துடன் வரும்போது, உனக்காக இங்கே பணம் தயாராக இருக்கும். வேண்டியதை எடுத்துக்கொண்டு செல்லலாம். ரோஜா இனி நீ போகலாம்!"

சுந்தரேஸ்வர ரிடமிருந்து அமைதியாகப் புறப்பட்டு வந்தன இந்தச் சொற்கள். அவை ஒவ்வொன்றும் தீயில்

காய்ச்சப்பட்ட ஈட்டிபோல அவள் இதயத்தைத் தாக்கி புண்ணுக்கின. அவள் உணர்ச்சிகளில் ரத்தம் வடிந்தது. அதரங்கள் துடித்தன. விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்தது. மெதுவாக அங்கிருந்து சென்று விட்டாள்.

* * *

## 7

அன்று மாதவனின் நிலைமை மோசமாகிவிட்டது. டாக்டரிடம் ஓடினுள் ரோஜா. ஆபத்துக்கிரங்கி வந்து பார்த்த அவர் ஏதோ மருந்தொன்றைஎழுதிக்கொடுத்துவிட்டு, "இதே நிலைமையில் வைத்திருக்கக் கூடாதம்மா.......நான் வேண்டுமானல் வந்துநீ பார்க்கலாம். எல்லாவற்றையும் என்னல் செய்ய முடியுமா?"—என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். மனமிடிந்து அப்படியே உட்கார்ந்து விட்டாள் ரோஜா.

ரோஜாவின் உள்ளத்திலே புயல் வீசத் துவங்கியது. சுகுமாரனும், மாதவனும் அவளுடைய மனக் கண் முன் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தனர்.

'சுகுமாரன் இல்லாவிட்டால் வாழ்வில்லை. ஆனுல் மாதவன் இல்லாவிட்டால் நானே இல்லை' என்று அவளுடைய உள்ளம் ஓலமிட்டது. படுக்கையில் கிடந்த மாதவனைப் பார்த்தாள். என்னைக் காப்பாற்று, உன்னுல் முடியும்—என்னைக் காப்பாற்று'—என்று அந்த உருவம் அவளைப் பார்த்துக் கெஞ்சுவது போல் இருந்தது. கரங்களால் முகத்தைப் பொத்திக்கொண்டுக் கேவிக் கேவி அழுதாள். முகத்திலிருந்து கையை எடுக்கும் போது, அவள் விழிகளில் திரை

கட்டியிருந்த கண்ணீரின் இமைகளினூடே சுந்தரேஸ்வரரின் முகம் பளிச்சென்று தெரிந்தது. அன்று நடந்ததை நினைத்துக்கொண்டாள். நோட்டுக்கத்தைத் தரையில் கிடந்தன. தன்னுடைய விழிகளிலிருந்து சிந்தியகண்ணீரும் அதன்மேல் துளிர்த்து நின்றதையும் எண்ணிப் பார்த்துக்கொண்டாள். பணம், ஏழைகளின் கைக்குவர காணிக்கை கேட்கிறது. அதுவும் எப்படிப்பட்ட காணிக்கை ? இதயத்தைப் பிழிந்தெடுக்கும் வேதனையிருக்கிறதே, அதைக்கண்ணீராக்கி விழிகளின் வெளியேதள்ளுகிறதே—அந்தக் கண்ணீரைக்காணிக்கையாகக் கேட்கிறது—சில சமயங்களில் வாழ்வைக் கேட்கிறது, இன்னும் சில சமயங்களில் உயிரையே கேட்கிறது !

ரோஜாவின் உள்ளம் துக்கத்தால் பொருமியது! 'ஐயோ தெய்வமே அண்ணனைக் காப்பாற்றமாட்டாயா ?'—என்ற வார்த்தைகள் வேதனைத் தீயில் வெந்துருகும் அவளுடைய நெஞ்சிலிருந்து தொண்டை வரை வந்து விட்டன. துக்கமென்றவிக்கல் அந்த வாசகத்தை வெளியே வராமல் தடுத்து நிறுத்தி விட்டது. அப்படி வெளிவந்துதான் என்ன பிரயோசனம்? அந்தத் தெய்வத்தால்தான் என்ன செய்ய முடியும் ? துயரப்படுவோரின் நெஞ்சுக் குமுறல்களைக் கேட்டுக்கேட்டு அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை இது வரை. சர்வ சக்தியுமுடையது என்று கருதப்படும். அதனால் வாதைப்படுவோரின் வாழ்வைச் சீராக்க முடியாது திணருகிறது. சர்வ வல்லமையும் உள்ளது என்று சொல்லப்படும் அதனிடம் ஒரு வல்லமையும் இல்லாது திண்டாடுகிறது! எத்தனையோ ரோஜாக்களின் சோக மூச்சு—இதயக் குமுறல் எல்லாம் பாறையில் மோதிய அலைகளைப்போல் பழையபடி அவர்களிடமே வந்து சரணடைந்து விட்டது ! மூடத்தனத்தில்

நெளிந்து கொண்டிருந்த மனிதனின் அழுகிய கற்பனையில் முளைத்த இந்தக் கடவுளும், பணமும் ஒன்றுதான் என்று எப்படித்தான் ரோஜாக்களால் அறிய முடியும்? பணம் ஒரு ஈட்டி, கடவுள் ஒரு சவுக்கு! இது யாருக்குப் பயப்படுகிறது? எவரை வதைக்கிறது? யாருடைய வாழ்க்கையைச் சூறை யாடுகிறது?

தெய்வமும் காணிக்கை கேட்கிறது? கண்ணீரை—வாழ்வை—உயிரை காணிக்கையாகக் கேட்கிறது. இல்லை! அத்தெய்வத்தின் பின்னால் நின்றுகொண்டு, அதை ஆட்டிப் படைக்கும் சூத்திரதாரி கேட்கிறது! இந்தப் பணத்தின்—இந்தத் தெய்வத்தின் சூத்ரதாரி யார் எது?——

பாவம், இந்தக் கேள்வியைப்பற்றி—அவள் சிந்திக்கவே யில்லை. விடை என்ன தெரியப்போகிறது? சுந்தரேஸ்வரரின் முகம் தான் தெரிந்தது, அவளுடைய சிந்தனைத் திரையிலே. அந்தப் பண நோட்டுக்களிடையே மாதவன் மகிழ்ச்சியுடன் உலவுவதுபோல் தெரிந்தது அவளுக்கு!

"ஆம்! அண்ணா மகிழ்ச்சியுடன் உலாவவேண்டுமானால்——படுக்கையிலிருந்து எழுந்து ரோஜா..........! என்று வாஞ்சையுடன் அழைக்க வேண்டுமானால்——அந்தப் பண நோட்டுக்கள் வேண்டும். சுந்தரரின் படுக்கையறையில் நான் இருக்கவேண்டும்...........! அப்படியானால் சுகுமார னுக்குத் துரோகம் செய்வதா? அண்ணனுக்காகத் துரோகம் செய்யவேண்டுமானால், சுகுமாரனுக்குத் துரோகம் செய்ய வேண்டுமா? துரோகத்தின் மேல் தியாகமா? தியாகத்துக் காக அதுவும் எப்படிப்பட்ட துரோகம்? மகனின் மார்பிலும்

தோளிலும் புரண்டவள், அதே மகனின் தந்தையுடைய மார்பிலும், தோளிலும் புரள்வதன் மூலமாக ... ! ஐயோ.... !

ரோஜாவின் மண்டைக்குள் எண்ணங்கள் குவிந்து ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டிருந்தன. உள்ளம் கொந்தளித்தது. சிந்தனை புயலெனச் சீறி பாய்ந்து கொண் டிருந்தது. ஒரே போர்! மனப்போர்!!

அவளுடைய இதயம் கல்லாகிக் கொண்டிருந்தது. கடைசியில் கல்லாகியே விட்டது! ஆம், என் அண்ணனுக் காக — ஒரு குறையுமில்லாது ஆசையுடன் — அருமை யுடன் — அன்புடன் வளர்த்த அண்ணனுக்காக — தாய் தந்தையற்ற என்னை ஏங்க விடாது — என் கண்களைக் கலங்க விடாது வளர்த்த அண்ணனுக்காக — தன் உயிரையே என்மேல் வைத்து நேசிக்கும் என் அண்ணனுக் கா......என்ற வார்த்தைகள் கல்லாகிப்போன அவளுடைய இதயத்தில் செதுக்கப்பட்டன.

மெதுவாக எழுந்திருந்தாள். ஒருமுறை மாதவனைப் பார்த்தாள். அவன் தன்னுணர்வற்றுக் கிடந்தான். வெளியே வந்தாள். எதிரே, சுந்தரேஸ்வரரின் ஒரடுக்கு மாளிகை அவளை பார்த்துச் சிரிப்பதுபோலிருந்தது. மஞ்சள் வர்ணம் பூசப்பட்ட அதன் சுவர்கள் அவளை பார்த்து நெடுமூச் செறிந்தன.

தளர் நடையுடன், தயங்கித் தயங்கி உள்ளே வந்த ரோஜாவைக் கண்டதும், "ரோஜா, நீ வருவாய் என்று எனக்குத் தெரியும். நீ அன்று கோபத்துடன் போனுய் பாரு;

ஆனுல், நான் ஆத்திரப்படவில்லை. உன்மேல் கோபிக்கவே மாட்டேன் வா........! வந்து இப்படி உட்கார்!" — என்ருர்.

ரோஜா உட்காரவில்லை, நாற்காலியின் கைப்பிடியில் தன் கைகளால் பிடித்துக்கொண்டே நின்ருள்.

" சம்மதம் தெரிவிக்கத்தானே வந்தாய் ?"

" ஆம் " என்று தலையை ஆட்டினுள்.

" சபாஷ் ! நான் பாக்கிய சாலி மட்டுமல்ல, நீயும் புத்தி சாலி......!!"

" ஒரு நிபந்தனை !" — கரகரப்பான குரலிலிருந்து வந்தன வார்த்தைகள்.

" என்ன ?" — என்று விளித்தார் சுந்தரர்.

" அண்ணன் சுகமான பிறகுதான் கலியாணம் செய்து கொள்ளமுடியும் !"

" இது தானு........! நானும் என்னமோ என்று பார்த்தேன்! "

" இன்னென்றும் பாக்கியிருக்கிறது !"

" சரி, சரி, எது எது வேண்டுமோ கேள் !"

" நீங்கள் என்னென்ன செய்வீர்களென்று சொன்னீர்களோ, அத்தனையையும் நிறைவேற்றி வைக்க வேண்டும் !"

இதில் உனக்குச் சந்தேகமே வேண்டாம் ரோஜா, அவனுக்கு என்ன என்ன செய்யவேண்டு மென்று சொல்கிருயோ, அவ்வளவையும் செய்து வைக்கிறேன். சரிதானே?

அவள் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. "உனக்கு இப்போ பணம் வேண்டுமாக்கும்!" — என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஒரு அறைக்குள் சென்றார். சிறிது நேரத்திற்குள் அங்கிருந்தபடியே ரோஜாவைக் கூப்பிட்டார். அவள் சென்றாள். "இதோ......வேண்டியதை எடுத்துக் கொள்........!" என்று மேசையில் கிடந்த வெள்ளிப் பேழையைக் காட்டினார். அவள் அதைப் பார்த்தாள். கட்டுக் கட்டாகக் கரன்சி நோட்டுக்கள் அதனுள் இருந்தன. சில நிமிடங்கள் அதைபார்த்துக்கொண்டு அப்படியே நின்றாள்.

சுந்தரர் என்ன நினைத்தாரோ, தீடீரென அவளை இறுக அணைத்தார். மளமளவென்று அவள் கன்னத்தில் முத்தத் தைப் பாய்ச்சினார். மிருகத்தின் பாய்ச்சலுக்கு முன்னே மனித உணர்ச்சி பயந்து விடுகிறது. அல்லது மரத்து விடு கிறது. ரோஜாவின் உணர்ச்சிகள் மரத்து விட்டன. சில நிமிடங்கள்தான் சுந்தரரின் அணைப்பிலிருந்தாள். பிறகு சடேரென விலகினாள்.

"நான் இன்னும் மனைவியாகவில்லை!"

சுந்தரர் சிரித்தார். "சரி, சரி, உன் இஷ்டப்படியே....! இந்தா இதை எடுத்துக்கொள்!"

"எனக்குப் பணம் வேண்டாம்!"

"என்ன, உனக்குப் பணம் வேண்டாமா?"

"ஆம். ஆனால் அண்ணனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு....!"

"புரிகிறது...'புரிகிறது' சரி, நீ வீட்டுக்குப் போ"... இல்லை...நில்லு....!'—என்று சொல்லிக்கொண்டே, அங்கே

யிருந்த டெலிபோன் நம்பரைத் திருப்பிவிட்டு ரிஸீவரைக் காதில் வைத்தார். ரோஜா அவரையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

ரிஸீவரைப் பழையபடி வைத்துவிட்டு, "இன்னும் பத்து நிமிடங்களுக்குள் டாக்டர் வந்துவிடுவார். நீ வீட்டுக்கு போ, நான் அவரையும் அழைத்துக் கொண்டு வருகிறேன் !"—என்ருர் புன்னகையுடன்.

ரோஜா ஒன்றும் பேசாமல், உணர்ச்சியற்று, பிணம் போல் நடந்தாள் வெளியே.

கால் மணி நேரத்துக்குள்ளாக, டாக்டரும் சுந்தரரும் ரோஜாவின் வீட்டுக்குள் நுழைந்தார்கள். டாக்டர் மாதவனை நன்ருகப் பரிசோதித்தார். அவரருகில் சுந்தரர் நின்று கொண்டிருந்தார். எதிரே, படுக்கையின் அருகில், ரோஜா நின்று கொண்டிருந்தாள். மாதவனைச் சோதித்த டாக்டர், "சார் நல்ல வேளை இப்போதாவது என்னை அழைத்தீர்களே இன்னும் ஒரு மணி நேரம் சென்று அழைத்திருந்தால், உயிருக்கு உத்திரவாதம் செய்ய முடியாது !"—என்ருர்.

ரோஜாவுக்குத் 'திக்' கென்றது. மனம் பயத்தினுல் அடித்துக்கொண்டதை அவளுடைய முகம் படம் போட்டுக் காட்டியது. இதைக் கவனித்தார், சுந்தரர். மெதுவாக அவளருகில் சென்று தோளில் கையை வைத்தவாறே 'பயப்படாதே !'—என்ருர். அப்போது, ரோஜாவின் தோள் குலுங்கி நின்றது ஒரு கணம்.

"சார், நோயாளிக்கு ஏற்ற சூழ்நிலை இந்த வீட்டிலே இல்லை...! நன்ருகக் கவனிக்க வேண்டுமானுல்—!!"

டாக்டர் சொல்லி முடிக்கவில்லை. "என் பங்களாவிலே ...!" என்று இழுத்தார்.

"ஆல் ரைட். அதுதான் சரி. இதோ இந்த மருந்தைக் கொடுங்கள். நான் சாயங்காலம் வருகிறேன்!"—என்று சொல்லி மருந்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார் டாக்டர்.

ஒரு மணி நேரத்துக்கெல்லாம், மாதவன் சுந்தரரின் பங்களாவுக்குக் கொண்டு வரப்பட்டான். வேலைக்கார மாரிக்கு சுந்தரர் உத்தரவு போட்டுவிட்டார். ரோஜாவுக்குத் துணையாக மாதவனைக் கவனிக்கவேண்டும் என்று.

* * *

## 8

இரண்டு வாரங்கள் ஓடி மறைந்தன. மாதவனுக்கு நோய் படிந்திருந்தது. ரோஜாவின் மனதில் சிறிது அமைதி நிலவியது. அல்லும் பகலும் அண்ணன் பக்கத்திலேயே இருந்தாள். அவளிடம் அப்போது ஒரே ஒரு உணர்ச்சிதான் ஊடுருவி நின்றது. அவன் பிழைத்தெழுந்து மனமகிழ்ச்சியுடன் உலவவேண்டுமென்ற உணர்ச்சிதான் அது.

நாள் ஆக ஆக மாதவன் தேறிக்கொண்டே வந்தான். இதையும் உணர அவனுக்குச் சக்தி வந்து விட்டது. அப்போதுதான் தான் இருக்குமிடத்தைப் பார்த்தான். விசாலமான அறை. எலக்டிரிக் லைட், ஜன்னல்கள் மெத்தைபோட்ட ஸ்பிரிங் கட்டில், பிற எல்லா வசதிகளும்...... ' அவனுக்கு ஒன்றும் புரிய வில்லை. இது ஆஸ்பத்திரியோ என்று நினைத்

தான். ஆனால், டாக்டர்களோ, நர்ஸ்களோ நடமாடவில்லை. கேள்வி அலைகள் அவனது உள்ளக்கடலில் எழுந்தன. ஒரு நாள் முழுதும் இதே நிலையிலிருந்தான்.

அன்றிரவு ரோஜாவை தன் பக்கத்தில் அமரச்சொன்னான். அவள் அவனருகில் வாஞ்சையுடன் உட்கார்ந்தாள். நன்ருக அவளைக் கவனித்தான். முன்னிருந்த தேஜஸ், மகிழ்ச்சி—ஒன்றுமே அவளிடம் இல்லை. அதுமட்டுமல்ல மெலிந்து மிருந்தாள். அவள் விழிகளில் ஏதோ புரியாத சோகச் சுழல் மின்னிடுவது போலிருந்தது...! என்னுடைய ஜீவ மரணப் போராட்டத்தின் விளைவுதான் என் ரோஜா இப்படி யிருக்கிருள்—என்று நினைத்தான்,

"ரோஜா....! இனி, கவலைப்படாதே. நான் இனி பிழைத்து விடுவேன்! ஆனல், நீதான் ரொம்பவும் இளைத்து விட்டாயம்மா ?"

"நீயேன் அண்ணு அதைப்பற்றிச் சிந்திக்கிருய் ? நீ நல்லபடியாய் எழுந்திருந்தே....அப்போதிருந்து நான் பழைய படி ஆகிவிடுவேன்"—இதைச் சொல்லும்போது அவளுடைய குரல் கர கரத்தது. ஆனல், மாதவன் அதைக் கவனிக்கவில்லை.

"ஆமா, இந்த இடம்....?ஆஸ்பத்திரிமாதிரியும் தோன்றவில்லை...! எனக்காகச் செலவழிக்கப் பணம்....?"—சிந்தனையின் வட்டத்திலே சுழன்று நின்றுவிட்டுப் பாய்ந்தன இக் கேள்விகள்.

ரோஜாவுக்கு மனம் 'பட பட' என்றடித்துக்கொண்டது. தனக்கும் சுந்தரேஸ்வரருக்கும் ஏற்பட்டுள்ள முடிவைச் சொல்ல அவள் விரும்பவில்லை, சொன்னால் அவனுடைய மனம் அதிர்ச்சியடைந்து திரும்பவும்.....!—அதை எண்ணிப் பார்க்கவே அவள் நெஞ்சு நடுங்கியது.

"எல்லாம் பிறகு சொல்றேன் அண்ணா...இப்போது ஒன்றும் கேட்காதே. நீ மட்டும் மன அமைதியாக இரு. ஒன்றுக்கும் கவலைப்படாதே—எதையும் சிந்திக்காதே !—என்று சொல்லிச் சிரித்தாள். ஆனால், அந்தச் சிரிப்பிலே மலர்ச்சியில்லை ; வரட்சிதான் வட்டமிட்டது அதையும் மாதவன் கவனிக்கவில்லை.

"ஏன், ரோஜா இப்போ சொன்னால் என்ன ?"

"டாக்டர், அதிகமாகப் பேசக்கூடாது, மூளைக்கு வேலை கொடுக்கக்கூடாது !"—என்று சொல்லியிருக்கிறார். பேசாமல் இரு. உன் ரோஜாவுக்காகவாவது எதையும் இப்போது கேட்காதே !"–என்று சொல்லிவிட்டு வெளியே வந்துவிட்டாள். அப்போது, அவள் விழிக்கடையில் கண்ணீர் தேங்கிநின்றது.

* * *

இனியும் நாட்களைத் தள்ளிக் கொண்டுபோவது சுந்தரேஸ்வரருக்குப் பிடிக்கவில்லை. முழு ஆரோக்கியத்துடன் மாதவன் எழுந்து நடமாடத் துவங்கினால். ரோஜாவைக் கலியாணம் செய்து கொள்வது கூட நடக்காதுவிடும், அவனே தடுத்து நிறுத்தினாலும், நிறுத்தி விடலாம். ஆகவே,

படுக்கையிலிருக்கும் இந்த நேரத்திலேயே பாவையின் கழுத்திலே தாலியைக் கட்டிவிடவேண்டும் என்று தீர்மானித்து விட்டார்.

ஒருநாள் திடீரென்று ரோஜாவைக் கூப்பிட்டு அலங்காரம் பண்ணச் சொன்னார்.

"ஏன் ?"—என்றாள் ரோஜா !

"ஒரு முக்கியமான இடத்துக்குப் போகவேண்டும் !"

"எந்த இடத்துக்கு ?"

"எல்லாம் அப்புறம் சொல்றேன். இப்போது சீக்கிரம் அலங்காரம் செய்துகொண்டு புறப்படு !"

ரோஜாவைச் சிந்திக்க விடவில்லை, சுந்தரர் துரிதப்படுத்தினார். அவளும் இயந்திரம்போல் அரையுங் குறையுமாக அலங்காரம் செய்துகொண்டு வந்து நின்றாள். அடுத்த விநாடி வாசலில் தயாராக நின்ற ஒரு காரில் ரோஜாவை உட்கார வைத்துக்கொண்டு எங்கேயோ சென்றார்.

அது ஒரு கோயில்! காரை விட்டு இறங்கிய சுந்தரர் உள்ளே சென்றார். விழிகளில் கேள்வியையும், ஆச்சரியத்தையும் படர வைத்துக்கொண்டு அவர் பின்னால் சென்றாள் ரோஜா ! அங்கே முன்னேற்பாடாக திருமணத்துக்காக வேண்டிய ஆயத்தங்களுடன் புரோகிதர் நின்று கொண்டிருந்தார். இவர்களிருவரையும் கண்டதும், மரியாதையுடன் வரவேற்றார். மள மளவென்று சடங்குகளை ஆரம்பித்தார். ஒரு நொடியில் ரோஜாவுக்கு எல்லாம் புரிந்துவிட்டது.

முறிந்து விழுந்த தன்னுடைய வாழ்க்கையை சமாதிக்குள் தள்ளும் சடங்குதான் இப்போது நடக்கிறது ' என்று எண்ணிக்கொண்டாள். துக்கச் சுமை அவள் நெஞ்சை அழுத்தியது. அவளுடைய சிந்தை சிதைந்து சின்னபின்னமாக்கிகொண்டிருந்தது. இவள் இந்த நிலைமையிலிருக்க சடங்குகள் நடந்துகொண்டிருந்தன. மணி யோசையும். சூடம், சாம்பிராணி ஆகியவைகளின் பூசையும், ரோஜாவின் வாழ்வு கருப்பு மயமாகிவிட்டது என்பதை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன. புரோகிதரின் மந்திரம், தன் சிங்காரத்துக்காக இளமங்கையின் உள்ளத்தைச் சித்திரவதை செய்யப்படுவதற்கு—அந்த அணங்கின் வாழ்வை சுடுகாட்டுக்கு அனுப்புவதற்கு—'ஆசீர்வாதம்' செய்துகொண்டிருந்தது. புரோகிதத்தின் பரம்பரை பண்பே அதுதானே! அது பணத்துக்காக எதையும் செய்யும். அதைப் 'புண்ணியம்' என்று சொல்லப்படுகிறதே—அந்தப் புண்ணியத்துக்கு மேலேயே நின்று கொண்டு இந்த 'பாப' காரியத்தைச் செய்யும்! சாஸ்திரம் சம்மதிக்கும்...சமூகம்கூட அதற்கு அங்கீகாரம் செய்யும்! ஐயோ.......வாழ்க்கையே, உன்னை எத்தனை பேர்—எத்தனைவிதமாகச் சித்திரவதை செய்கிருர்கள்!

சுந்தரர் தாலிக் கொடியை ரோஜாவின் கழுத்தில் கட்டும்போது, அவளுடைய உள்ளத்தில் சுகுமாரனின் உருவம் வந்து பளிச்சென்று முகம் காட்டி மறைந்தது! 'தீர்க்க சுமங்கலீபவா!' என்று புரோகிதர் வாழ்த்தினர். ஆனல், செத்துக்கொண்டிருந்த அவளுடைய வாழ்க்கையின் கடைசிக்கோடும் காலை நீட்டிவிட்டது. முத்து முத்தாய் கண்ணீர் உருண்டன கன்னத்தில். கழுத்தில் கிடந்த தாலியுடன் பூமாலையில் இணைக்கப்பட்டிருந்த மலர்களின்மேல், அந்தக் கண்ணீர்த்

துளிர்கள் விழுந்தன. அந்த மலர் மாலையில்கூட, ஏதோ இரண்டொரு ரோஜா இதழ்கள் கருகியிருந்தன.

மனைவியென்ற முத்திரை-அதற்குச் சாட்சியாகக் கழுத்திலிடப்பட்ட தாலி—இவற்றுடன் இயந்திரம்போல்—சர்வாங்கமும் குன்றிட பலியிடப்பட நிற்கும் ஒரு பாவமும் அறியாத ஆட்டுக் குட்டியைப்போல, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நின்ற ரோஜாவின் கையைப் பிடித்தார் சுந்தரர். மெதுவாக நடந்துவந்தார் காரைநோக்கி, சில நிமிடங்களுக்குள் கார் சென்றுகொண்டிருந்தது. சுந்தரரின் உள்ளத்தில், 'வாழ்க்கை'யென்றால் என்ன ? என்ற கேள்விக்கு " சொர்க்கம் !" என்று விடை கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் வாழ்க்கையென்றால்— அது ஒரு " நாசம் "! —என்று யாரோ தொலைவில் கூவுவதுபோலிருந்தது ரோஜாவுக்கு.

வீட்டுக்கு வந்தது முதல் சுந்தரருடன் ஒன்றுமே பேசவில்லை. அன்று நடந்த நிகழ்ச்சியின் காரணமாக எவ்வித மாற்றத்தையும் அவள் காட்டவில்லை. வழக்கம்போல் இருந்தாள். தாலியைக் கொடியை மட்டும் ஜாக்கட்டுக்குள் மறைத்துக் கொண்டாள். மாதவன் காணக்கூடாதென்ற எண்ணம்தான்.

இரவானதும், தன் அறைக்கு அழைத்தார் சுந்தரர். 'தலைவலி '—என்று சொல்லிவிட்டு, அண்ணனின் அறைக்குள்ளேயே படுத்துவிட்டாள். நித்திரையே வரவில்லை. எழுந்து மாதவனைப் பார்த்தாள். அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான். ஜன்னல் திரையை விலக்கிவிட்டு வானத்தைப் பார்த்தாள். முகில் கூட்டங்களின் எதிர் ஓட்டத்தைத் தகர்த் தெறிந்துகொண்டு நிலவு வந்துகொண் டிருந்தது.

உள்ளத்தில் எப்போது வெறுப்பும், விரக்தியும் அரசோச்சத் துவங்குகிறதோ, அதிலிருந்து எந்த அழகுமே சலிப்புத் தட்டத் துவங்குகிறது. அந்த வானத்து மதியின் அழகை அவள் ரஸிக்கவில்லே. சுந்தரரின் மனைவி இன்று—இதே நேரத்தில் சுகுமாரனின் மனைவியாயிருந்தால்—இந்த நிலவு எவ்வளவு இனிக்கும் ? இன்று கசக்கிறது ! சந்தர்ப்பங்கள் சூழ் நிலைகள்—இவைகள் சம்பவங்களை உருவாக்குகின்றன. இச் சம்பவங்கள்தான் மனோபாவத்தின் ஓட்டத்தை—அதன் சுவைப்பை — இன்னதென்று நிர்ணயித்து விடுகின்றன ! ரோஜாவின் நினைவுச் சுழல் சுகுமாரனைச் சுற்றிச் சுற்றி வந்தது. அந்தச் சுழல் நின்றதும் சுகுமாரன் இல்லை, சுந்த ரேஸ்வரர்தான் காட்சியளித்தார். கற்பாரையிலிருந்து நீர் வராது. ஆனல், உள்ளம் கல்லானாலும், சில சமயங்களில் அங்கிருந்து கண்ணீர் வரும் ! அது கண்ணீரா—? இல்லை.... ஒரு பேறும் இல்லை—அது இரத்தம் ! இரத்தம் ! ரோஜா வுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது. ஓடி வந்து படுக்கையில் விழுந்தாள்.

*   *   *

## 9

திருமணம் முடிந்த மறுநாள் சுந்தரர் ஏதோ தவிர்க்க முடியாத அவசர வேலையாகப் பட்டணம் சென்றுவிட்டார். அவர் சென்றதிலிருந்து, கொந்தளித்துக் கொண்டிருந்த ரோஜாவின் உள்ளம் சிறிது அமைதி கண்டது.

இடையிலே இரண்டு வாரங்கள் பறந்தோடின. மாத வன், பூர்ண உடல் நலத்துடன் காணப்பட்டான். அந்த

மாளிகை சுந்தரேஸ்வரருடையது என்பதை அறிந்துகொண் டான். தான் அங்கிருப்பதும், ரோஜா இதுபற்றி ஒன்றும் கூறுமலிருப்பதும் பலத்த சந்தேகத்தை உண்டாக்கியது. இன்று எல்லாவற்றையும் அவளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று முடிவுடன் இருந்தான்.

வாசலில் ஹார்ன் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து சுந்தரரும் வந்தார். "ரோஜா....!"—என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே போனவர், அறை வாசலிலே ஒரு நாற் காலியில் உட்கார்ந்து பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்த மாதவனைக் கண்டதும், "சுகமாயிட்டே, ரொம்ப சந்தோஷம் என்ருர்.

சடக்கென்று முகத்தைத் தூக்கிஞன் மாதவன். எதிரே சுந்தரர் நிற்பதைக் கண்டதும், ஒன்றும் புரியாமல் விழித் தான் சில விநாடிகள். சுந்தரரும் ஒன்றும் பேசாமல்உள்ளே சென்றவர், சில நிமிடங்களுக்குள் திரும்பவும் வந்து, அவனுக்கெதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

"ரோஜா, உனக்கு எல்லாவற்றையும் சொல்லியிருப் பாள் என்று நினைக்கிறேன்!"

"இல்லையே....! அவள் எனக்கு ஒன்றுமே சொல்ல வில்லையே....!"

"அப்படியா, பரவாயில்லே....! இனி நீதான் என் பஸ் கம்பெனிக்கு மானேஜர். அதுமட்டுமல்ல இனி உனக்கு ஆகவேண்டியதை யெல்லாம்....!"

அவர் சொல்லி முடிக்கவில்லை. "என்ன சொன்னீர் கள்...?"—பரபரப்புடன் கேட்டான்.

"ஆம்....ரோஜா, என் மனைவியாக இருக்கிருள் இப் போது. ஆகவே...!"

ரோஜா உங்கள் மனைவியா....ரோஜா உங்கள் மனை வியா...! நான் நம்பவேமாட்டேன்...! ஒருக்காலுமில்லை....! அவள் உங்கள் மனைவியாக இருக்க முடியாது !—தன்னை அறியாமல் கத்தினன். அந்தச் சத்தத்தால் மாளிகையே அதிர்ந்து விழுவது போலிருந்தது !

இந்தச் சத்தத்தைக் கேட்டு ரோஜா ஓடி வந்தாள். "ரோஜா...! உண்மையைச் சொல்! நீ இவருடைய மனை வியா....?" என்று கூவினன்! சில விநாடிகள் சிலைபோல் நின்ற ரோஜா, ஆம்! தலையை ஆட்டினள். "என்ன, நீ அவ ருக்கு மனைவியாகிவிட்டாயா....?" என்று அலறினன். அந்த ஓசை நான்கு பக்கமும் சூழ்ந்திருந்த சுவரிலே எதிரொலித்து நின்றது. சுந்தரருக்கு நிலைமை சரியாகப்படவில்லை. மெது வாக எழுந்து உள்ளே போனர்.

பூகம்பம், புயல் காற்று எல்லாம் சேர்ந்து பயங்கரமான இரைச்சலுடன் சுழலுவதுபோல் இருந்தது. மாதவனுக்கு செடியில் மலர்ந்து நின்ற ஒரு ரோஜா பலாத்காரமாகப் பிடுங்கப்பட்டு, ஒரு எருமையின் காலடியில் நசுங்குவது போல் ஒரு பிரமை தட்டிற்று. அவனுடைய இதயம் எரி மலையென வெடித்து விட்டது !

எரிமலை வெடித்தது....! அவனுடைய எண்ணங்கள் தீ குழம்புகள் எனச் சிதறின....தீப்பாறைகளின் துகள்போல் அவனுடைய எண்ணங்கள், இரத்த பிரவாகத்தைப்போன்ற உணர்ச்சிக்களுக்கிடையே சுருண்டுகிடந்தன. அதிலே ஒரே தகதகப்பு! சிந்தனை நெருப்பாறுபோல பேரிரைச்சலுடன் பாய்ந்து கொண்டிருந்தது. எட்டியதூரம் வரை ஒரே பிரளயம்! இந்த உலகம்—இல்லை! பூமி சுழலுவது போலிருந்தது.

மாதவனின் மன நிலை இந்தப்பிரமையிலே சீறிக்கொண்டிருந்தது அப்போது.

"மவுண்ட் லாமிங்க்டன்" என்ற எரிமலை வெடித்து விட்டது. தீச் சில்லுகள் சிறு சிறு துண்டுகளாகச் சிதறி, அக்கம் பக்கம் ஆகாயம் எங்கும் பறந்தன. மனுக்கள் மாய்ந்தன! கோரத்தின் உச்சி—நாசத்தின் சிகரம் நடந்து முடிந்தது என்றும், புதிதாக ஒரு தீவு அதனருகே தோன்றலாயிற்று!" என்ற செய்தியைத்தாங்கிகொண்டிருந்த பத்திரிகை விரித்தபடியே எதிரே கிடந்த நாற்காலியில் கிடந்தது. அதை ஒரு முறை பார்த்தான். அந்த 'மவுண்ட் லாமிங்க்டன்' எரிமலையைப் போலத்தான் அவனுடைய மனநிலை இருந்தது. ஆனால், புதிதாக ஒரு தீவு தோன்றவில்லை. ஒருரோஜாதான் கருகிக் கிடந்தது, அங்கே! ரோஜாவைப் பார்த்தான். விம்மும் நெஞ்சையும், விழிகளில் தேங்கிநிற்கும் கண்ணீரையும் கண்டான். அவள் தலையைக் குனிந்து கொண்டு குலுங்கிக் குலுங்கி யழுதாள்.

"ரோஜா........!'—என்று மெதுவாகக் கூப்பிட்டான். அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். "உள்ளே வா...!" என்று சொல்லிக்கொண்டே அறைக்குள் நுழைந்தான், அவளும் பின்னால் சென்றாள்.

"ரோஜா...உனக்குப் பைத்தியமா பிடித்துவிட்டது ?" —என்றான்.

சேலைத்தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். வரண்ட சிரிப்பொன்று இதழ்களுக்கிடையே நெளிந்தது. "அப்படித்தான் அண்ணா நீ நினைப்பாய். ஆனால் இப்போது ஓரளவுக்கு என்மனம் நிம்மதியுடனிருக்கிறது !''—என்றாள்.

"நீ இந்த மாதிரி நடந்து கொள்ளுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை ! உன் வாழ்க்கையை..........!"

"ஏன் அண்ணா....வீணாக மனதை அலட்டிக்கொள்ளுகிறே ? நீ உயிருடன் இருக்கிறதே என்னுடைய வாழ்க்கையின் இலட்சியம்........!'

"ரோஜா நீ என்ன சொல்லுகிறாய் ? என்ன நடந்தது"

ரோஜாவிடமிருந்து ஒரு பெரு மூச்சு வந்தது. சில விநாடி மௌனமாக இருந்தாள். பிறகு எல்லாவற்றையும் சொன்னாள். கடைசியாக, என் வாழ்க்கையைப்பற்றி— என் காதலைப்பற்றி — நீ சிந்திக்காதே அண்ணா........! நீ மட்டும் என்னை விட்டுப் பிரிந்து விடக்கூடாது......!''— என்றாள்.

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த மாதவனின் மனம் வேதனைத் தணலில் கிடந்து உருகிற்று. அவளுடைய தியாகம் வாழ்க்கையின் சிகரத்தில் நின்று கொண்டு கையசைத்துக்காட்டியது. இந்தத்தியாகம் அர்த்த முள்ளதா? இதைப்போற்றத்தான் வேண்டுமா? பாராட்டத் தான் வேண்டுமா? ஒருவருடைய வாழ்க்கை — காதல் — பலாத்காரமாகக் கொல்லப்படவேண்டிய பல சந்தர்ப்பங்களை உற்பத்தி செய்துவிடுகிறது இந்தச் சமுதாயம். சாகடிக்கப் பட்ட வாழ்க்கையின்மேல் — நசுங்கிக்கொண்டு முனகல் சத்தமிட்டவாறு கிடக்கும் காதலின்மேல் — தியாகம் என்ற கட்டடம் ஒளி வீசவேண்டுமா? வாழ்க்கை — மன அமைதி யுடன் — மகிழ்ச்சியுடன் — இன்பமுடன் — வாழவேண்டிய வாழ்க்கை எல்லோருக்கும் பொது. அது யாவருக்கும் இருக்கவேண்டும். ஒருவருடைய வாழ்க்கை — மற்றவரின் துன்பத்தின்மேல் — மற்றவரின் செத்த வாழ்க்கைக்குமேல் தான் வாழவேண்டுமானால் — அதற்குத் தியாகம் என்ற பெயர்இருந்தாலும் சரி, அதுவேண்டவே வேண்டாம்! அந்தத் தியாகத்தை அங்கீகரிக்கவும் கூடாது! வாழ்க்கைக்காகப் போராடவேண்டும். வாழ்க்கையில்லாதவர்களுக்கு வாழ் வளிக்கப் போராடவேண்டும். அதற்காகத் தன்னுடைய வாழ்க்கையை அழித்துக்கொள்வதால், போராட முடியாது. அந்தப் போராட்டத்திலே உயிர் இருக்காது!

மாதவனின் சிந்தனை வளையம் எங்கெங்கேயோ சென் றது. சடேரென்று சுந்தரேஸ்வரரின் முகம் அவன் முன் வந்து நின்றது. சாவுக்கும் வாழ்வுக்கும் போராட்டம், அதன் நடுவே காமத்தின் சரஸ ஆட்டம்!"—என்று அவனுடைய உள்ளம் ஓங்காரமிட்டது. இதை நினைக்க, நினைக்க அவன்

உள்ளம் குமுறியது. ஆத்திரமென்னும் அனல் துண்டுகள், எரிமலையென இருக்கும் அவனது இதயத்திலே இருந்து வார்த்தைகளாகக் கிளம்பின. “பொசுக்கிவிடவேண்டும் இந்த உலகத்தையே இல்லை சுந்தரேஸ்வரரை! —— என்று அவன் இதழ் அசைந்தது.

* * *

ரோஜாவை முகர நினைத்தார், இன்பத்தை அனுபவிக்கத் துடி துடித்தார், சுந்தரர். ஆனால், அவருடைய படுக்கை அறையை எட்டியும் பார்க்கவில்லை ரோஜா. அங்கு செல்ல, அவள்உள்ளம் இடம் கொடுக்கவில்லை. சுந்தரரையும் தன்னையும் தம்பதிகளாக நினைத்துப்பார்க்கவே அவளுடையஉள்ளம் கூசிற்று. சாக்குப் போக்குச்சொல்லித் தட்டிக்கழித்துக் கொண்டு வந்தாள். ஆனால், சுந்தரருக்கோ பொறுக்க முடியவில்லை. அன்றிரவு எப்படியாவது அவளை ——, இந்த முடிவுடன் வெளியே சென்று விட்டார்.

சாயங்கால மாகியும் கோடையின்வெப்பம் குளிரவில்லை அனலின் தகதகப்பு இருந்து கொண்டுதானிருந்தது. வெளி ஹாலில் உட்கார்ந்தபடியே வெறிச்சோடிக்கிடந்த வீதியைப் பார்த்துக்கொண்டிருந்தாள், “ரோஜா............!” என்ற சத்தம் வந்ததும் திடுக்கிட்டு வெளிக்கேட்டுப்பக்கம் விழிகளைத் திருப்பினாள். சுகுமாரன் மலர்ந்த முகத்துடன் அவளை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவன் ஹாலுக்குள் நுழைந்ததும்தான் தாமதம், ‘சுகுமார்........’ என்று கூவிக் கொண்டே விரிந்த அவன் கரங்களுக்குள் போய் விழுந்தாள். அவள் முகம் சுகுமாரனின் மார்பிலே புதைந்திருந்தது. இதுவரை துககச்சுமையால் அழுந்திப்போய்க் கிடந்த அவ

ளுடைய இதயம் தடித்துத் தழும்பேறியிருந்தது. ஆனால், சுகுமாரனின் சந்திப்பு அந்தத் தழும்பைக் கிழித்து மறுபடியும் புண்ணாக்கிவிட்டது. அதிலிருந்த ரத்தம் கசிந்து கசிந்து, விழிகளின் வழியே கண்ணீராக வந்து கொட்டியது. விம்மி விம்மி அழுதாள். சுகுமாரன் மெல்ல அவள் தலையைத் தடவிக்கொடுத்தான்; அவளை வருடினான். ஆனால் ரோஜா வுக்கு அது மகிழ்ச்சியாக இல்லை—இன்பமாக இல்லை—சுகமாக இல்லை. ஏனோ நெருப்புப்போல் சுட்டது என்றாலும், அந்தச் சூட்டையே விரும்பியவள்போல் தன்னை மறந்து அப்படியே இருந்தாள். சுகுமாரனின் உணர்ச்சிகள் பொங்கியெழுந்தன. அவளை விட்டுப் பிரிந்திருந்த ஏக்கம், அவளுடைய ஸ்பரிசம் பட்டதும் பொசுங்கிவிட்டது. ஒருவித இன்பத்தின் குது குதுப்பு அவனுடலெங்கும் ஆர்ப்பாட்டம் செய்தது. சில நிமிடங்கள் அவளையே அணைத்துக்கொண்டுத் தன்னை மறந் திருந்தவன், மெதுவாக அவளை அழைத்துக்கொண்டு வந் தான், அவளுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தான். ரோஜாவின் அதரங்கள் துடித்தன. அந்த அதரங்களுடன் தன்னுடைய இதழ்களைப் பொருத்தினான். எத்தனை முறை அம்மாதிரி செய்தானோ, அவனுக்கே தெரியாது.

"டேய் சுகுமார்....!"—என்று ஒரு குரல் கர்ஜித்தது. இருவரும் திடுக்கிட்டு விலகினர். சுந்தரர் கண்களில் கனல் பறக்க நின்று கொண்டிருந்தார். ரோஜாவின் தலை சுழன் றது. அவளால் அங்கு நிற்க முடியவில்லை. மின்னல்போல் மறைந்துவிட்டாள். சுகுமாரன் பயப்படவில்லை. அதிர்ச்சி யடையவுமில்லை. புன்னகை தவழ ரோஜா நுழைந்த அறை யையே பார்த்துக் கொண்டு நின்றான்.

"சுகுமார்....!"

மெல்லத் தன் முகத்தைத் திருப்பினர், சுந்தரர் அவனருகில் வந்து கொண்டிருந்தார்.

"அவள் யார் தெரியுமா ?"

"தெரியும்! என் காதலி !"

"இல்லே, உன் சிற்றன்னே அதாவது என் மனேவி !"

"என்ன, என் ரோஜா உங்கள் மனேவியா....!"—சுகுமாரன் தன்னே யறியாமலே கூவினன்.

"ஆம், அவளுடைய கழுத்திலுள்ள தாலி அதற்கு சாட்சி !"

"இது அக்கிரமம், அநியாயம்! அப்பா...நீங்கள்"....

"செய்தது சரியானதுதான். அக்கிரமம், அநியாயம் என்றெல்லாம் அடுக்காதே! அவளே இனி சந்திக்கக் கூடாது; இங்கு வரவும் கூடாது!'

சுகுமாரன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள் அப்படியே நின்று விட்டன. மறுவிநாடி ரோஜா இருந்த அறைக்குள் பாய்ந்தான். ரோஜா தலேயணேக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தவள், அரவம்கேட்டு முகத்தைத் தூக்கினுள், சுகுமாரன் பட படப்புடன் நின்று கொண்டிருந்தான். அறை வாசலின் நிலேப்படியிலே சுந்தரர் நின்று கொண்டிருந்தார். மாறி, மாறி அவர்களிருவரையும் பார்த்தாள் ரோஜா. சுகுமாரனும் தன் தந்தையையும், அவளேயும் மாறி மாறிப் பார்த்தான். சுந்தரரோ அவர்களிருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

"ரோஜா, அவர் சொல்வது உண்மையா....?"—என்று சுந்தரரைச் சுட்டினுன். அவள் தலேயைக் குனிந்துகொண்டு மௌனமாக நின்ருள்.

" என் மௌனம் சாதிக்கிறே....? சொல் ரோஜா, நீ என் சிற்றன்னையாம்—அப்பா சொல்கிறர்! உண்மைதானே?

குனிந்திருந்த தலையை மெல்ல நிமிர்த்தினுள். விழிகளில் வழிந்திருந்த நீரை விரல்களால் துடைத்தாள். அவனை மேலும் கீழும் ஊடுருவிப் பார்த்தாள்.

' ஆம் சுகுமார்....!'—என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து மெதுவாக வந்தன!

" துரோகி....!"—என்று கத்தினுன். அவன் போட்ட சத்தத்தை அறைச் சுவரெல்லாம் எதிரொலித்தது. தன் சிவந்த விழிகளினுல், அவளை பார்த்தான். " துரோகி...."—என்று மீண்டும் ஒரு முறை கூவினுன். மறுவிநாடி சடக்கென்று வெளியே வந்து வேகமாக நடந்தான். அவனைப் பின் தொடர்ந்து ஓடி வந்த ரோஜா, அவன் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, " நான் துரோகியல்ல—நான் துரோகியல்ல!" என்று குழறினுள். திரும்பினுன் சுகுமாரன், இதற்கிடையில் ஹாலுக்குள் நுழைந்த மாதவன் இக்காட்சியைக் கண்டு ஸ்தம்பித்து நின்று விட்டான். ரோஜா சடக்கென்று எழுந்தாள். சுகுமாரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு " நான் துரோகியல்ல...நான் துரோகியல்ல சுகுமார்...!"—என்று கூவினுள். அவன் தன் கரங்களை உதறினுன். " துரோகிதான்....!"—என்று கூறிக்கொண்டே 'பளீர்' என்று அவள் கன்னத்தில் அறைந்தான். இதை யெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த சுந்தரர் வேகமாக ஓடிவந்தார். சுகுமாரனின் கன்னத்தை நோக்கி அவர் கை பறந்தது. 'பளார்' என்ற சத்தம் அதைத் தொடர்ந்து வந்தது மறுவிநாடி, " இங்கு நிற்காதே போ!" என்று சுந்தரர் கர்ஜித்தார். சுகுமாரன் அந்த ஓசை அடங்குவதற்குள் அங்கிருந்து

போய்விட்டான். உணர்ச்சியற்று சிலைபோல் நின்றிருந்த ரோஜாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினர் சுந்தரர்—ஒரு அறைக்குள்.

நின்றபடியே எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த மாதவனின் நெஞ்சு குமுறியது. கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே விழுந்தது. தள்ளாடித் தள்ளாடி நடந்து வெளியே வந்தான். அவன் கால்கள் நடந்து கொண்டிருந்தன. சிந்தனைச் சீறிப்பாய்ந்து கொண்டிருந்தது. மூளை கொதிப்படைந்தது. எண்ணங்கள் ஒன்றுடன் ஒன்று கட்டிப் புரண்டன. அவன் நடந்து கொண்டிருந்தான்.

ரோஜா சுகுமாரனைப் பற்றிச் சொல்லியிருந்தாள். ஆகவே இந்தச் சம்பவத்தை ஓரளவு அவன் எதிர்பார்த்துத்தானிருந்தான். இதைத் தவிர்க்க நாலைந்து நாட்களாக வழி தேடிக் கொண்டிருந்தான். சுகுமாரனை ரோஜா காதலித்ததைப் பற்றியோ, அவனுடைய உள்ளத்தில் தன் தங்கை அரசோச் சுவதைப்பற்றியோ அவன் தப்பாகக் கருதவில்லை. அதற்கு மாருக அவர்களுடைய காதல், தன்னை நோயிலிருந்து மீட்பதற்காக, சுந்தரேஸ்வரருக்குப் பலியிடப்பட்டதை நினைக்க நினைக்கத்தான் அவன் நெஞ்சு வேகியது. ரோஜாவுக்குரிய கணவனை அவன் கற்பனையில் சித்தரித்திருந்தான். அந்த உருவம் சுகுமாரனைப் போலத்தான் இருந்தது. ஆனல் இப்போது சுந்தரராகக் காட்சியளித்துக் கொண்டிருப்பதைக் காணக் காண அவன் கண்களில் கனல் பறந்தது. தான் யாருக்காக உயிர் வாழ்ந்தானே—அவளுடைய வாழ்க்கை மலர்ச் சோலையாக—இன்பத் தோட்டமாக—இருக்க வேண்டுமென்று உழைத்தானே—அவ

ளுடைய வாழ்க்கையை, தன்னுடைய பிணிச் சுழல் சுந்த ரேஸ்வரர் என்ற முட் புதருக்குள் தூக்கி யெறிந்து விட்டதை உணர்ந்தான். அந்த முட்புதருக்குள் கிடந்து தன் தங்கை வேதனைப் படுகிறுள். அந்த முட்களில் குத்திய காயத்தின் வேதனையைப் பொறுக்க முடியாமல் அவள் முனகுவதை யும்; அவன் உணர்ந்தான். தன் மேல் வைத்த பாசத்துக் காக—தன்னைச் சாவிலிருந்து மீட்க வேண்டுமென்ற ஒரே ஆசைக்காக, தன் காதலையே கருக்கிவிட்டாள் ரோஜா. அவளுக்கு அது பெருமையாக இருந்தது ஒரு கணம். தன் தமையனின் வாழ்வுக்காக—அவன் சந்தோஷமாக இருக்க வேண்டு மென்பதற்காக—தனது காதலைப் பலியிட்ட ஒரு உயர்ந்த பெண் தனக்குத் தங்கையாக வாய்த்ததைவிட்டு சில விநாடிகள் அவன் பெருமை கொண்டான். ஆனால் அந் தப் பெருமை நீடித்து நிற்கவில்லை.

" அண்ணு நீ பிழைத்துவிட்டாய். அதுமட்டுமல்ல இனி நீ சந்தோஷமாக—கஷ்டமில்லாமே, பணத்தோடே, செல் வாக்கோடே சிறப்பாக இருப்பாய். நான் அதைப் பார்த்தா வது மகிழ்ச்சியாக—மன அமைதியாக இருப்பேன் "—என்று ரோஜா சொன்னுள், அதைக் கேட்டுச் சிரித்தான் மாதவன் தன் மேல் கொண்ட உயிர்பாசம் அப்படிச் சொல்லுகிறது. ஆனல், அவன் அப்படியிருக்க முடியாது. சுகுமாரனின் மேல் உள்ள காதலைக் கருக்கிச் சுந்தரேஸ்வரருடன் வாழக் கூடிய அளவுக்கு இறுகிக் கெட்டியாகும் உள்ளம் அவளுக் கில்லை. இளமையின் இன்பத் துடிப்பிலே எழுந்து அசை போடும் உணர்ச்சிகளை அவளால் சுட்டுப் பொசுக்கமுடியாது சுகுமாரனைப் பிரிந்து, சுந்தரருடன் வாழும் அந்த நிலைமை யைத் தாங்கும் சக்தி அவளுக்கில்லை. விரும்பாத நெஞ்ச

மும், வேண்டாத முத்தமும் விஷம்! விஷம்!! ஆம், சுந்தரருடன் இணைக்கப்பட்ட வாழ்க்கை பலாத்கார மானது. அவருடைய நெஞ்சை, அவருடைய முத்தத்தை அவள் விரும்ப மாட்டாள். வாழ்க்கை அவளுக்கு விஷமாகத்தான் இருக்கும் இந்த விஷம் அவளுடைய உடலெங்கும் பரவி, நாளடைவில் இல்லை—சில நாட்களுக்குள்ளாகவே அவள் இறந்து விடுவாள். இதற்காகவா அவளை இந்தப்பாடுபட்டு வளர்த்தேன்? அவளுடைய பருவக் கனவுகள் பாழடிக்கப்படவா வளர்த்தேன்? என் ரோஜாவின் உணர்ச்சித் துடிப்புகள் வேதனைத் தீயில் பொசுக்கவா அவளை வளர்த்தேன்? அவளைப்பற்றி நான் கண்ட ஆசைக் கனவுகள் எல்லாம் கல்லறைக்குள் போட்டு மூடவா அவளை வளர்த்தேன்?—இல்லை....! இதற்கு ஒரு மாற்றம் காணவேண்டும். சுந்தரரின் மனைவியாக என் ரோஜா இருக்க முடியாது. அவள் சுகுமாரனின் மனைவியாக இருக்க வேண்டும்....!''

—இந்த விதமான சிந்தனைச் சுழலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தான் சில நாட்களாக. ஒரு முடிவுக்கும் வர அவனால் முடியவில்லை. ஆனால் இன்று அவன் கண்களால் கண்ட அந்தக் காட்சி அவனது இதயத்தை ஈட்டியால் குத்திக் குடைவதுபோ லிருந்தது. நடந்து கொண்டிருந்தான்.

அவன் தன்னைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. ரோஜாவின் வாழ்க்கையைப் பற்றித்தான் கவலை கொண்டான். அவள் சுகுமாரனுடன் வாழ வேண்டும்: கஷ்டப் படாமல் வாழவேண்டும். சுந்தரரிடமிருந்து ரோஜா பிரிக்கப்பட்டால், அவர் சும்மா இருக்கமாட்டார், தொல்லைகள் பல செய்வார். அதுமட்டுமல்ல தந்தைக்கும் மகனுக்குமிடையில் பயங்கரமான முடிவுகள் கூட வந்து விடலாம்.

அவன் மூளை மிக வேகமாக வேலை செய்தது. கடைசியில் ஒரு விசித்திரமான முடிவுக்கு வந்தான்.

* * *

## 10

இப்படி நடக்குமென்று சுகுமாரன் நினைக்கவேயில்லை அவனுடைய உள்ளம் வெடித்துச் சிதறுண்டுவிட்டது. தன்னுடைய இதயச் செடியிலே என்றும் மணம் வீசும் இன்ப ரோஜாவாக அவளை நினைத்திருந்தான். ஆனால் இப்போது கருகிய ரோஜாவாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தாள் அவன் காதலி. பம்பாயிலிருந்து வரும்போது, ரோஜாவைத் தன் இல்லாளாக்க நாள் குறித்துக்கொண்டு வந்தான். எட்டிய தூரத்திலிருந்து அவளை முகருவதைவிட கிட்ட வைத்து முகரவேண்டும். அதற்காகச் சீக்கிரமே அவளை மனைவியாக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தான். தன் இஷ்டத்தைத் தந்தையோ மற்றவர்களோ தடுக்கமாட்டார்கள் என்று எண்ணினான். ரோஜாவை அடித்தளமாக வைத்து அவன் கட்டிய கற்பனை மாளிகைகள்—இன்பக் கோட்டைகள்—எல்லாம் தவிடுபொடியாகிவிட்டன இன்று. பணத்துக்காக—சொத்துக்காக—என் அப்பனை மயக்கிவிட்டாள். இல்லாவிட்டால் எனக்கு இப்படித் துரோகம் செய்வாளா? எவனுடைய காதலியாக இருந்து சரஸமாடினாளோ, அவனுடைய தகப்பனுக்கே மனைவியாக இருந்து சரஸமாடுவதென்றால்—கேவலம்! தாசிகூட இந்தமாதிரி செய்யமாட்டாள். அமுதமென்று எண்ணினேன்; நஞ்சாகிவிட்டாள். இந்த ஒட்டாண்டிகளே இப்படித்தான். பணத்தைக் கண்டதும் பல்லைக்காட்டி நடிக்கும் பத்தினி வேஷத்தையெல்

லாம் கலந்து விடும்! ஏழைகள் சவகாசமே—அவர்கள்மேல் கொள்ளும் காதலே களிமண் கப்பல்தான். பணம் என்ற கடலில் அந்தக் கப்பல் கரைந்து விடும்....ரோஜா...! அழகான பெயர்...ஹூம்....! அழகு! அவள் அழகாய்த்தானிருக்கிருள் இந்த அழகு ஆட்கொள்ளி...!' இப்படிப் பல எண்ணிஞன். அவனுடைய உள்ளம் எதையெல்லாமோ அரற்றிக்கொண்டிருந்தது; பிதற்றிக் கொண்டிருந்தது. இந்த உலகமே சூன்யமாக இருந்தது அவனுக்கு. முறிந்துபோன ஆசைக் கனவுகள், இடிந்துபோன இன்பக் கோட்டைகளும் அவனுடைய மன உறுவில் சீரழிந்து கிடந்தன! மனோவிகாரத்தின் எல்லையில் நின்று கொண்டிருந்தான்.

பகல் பொழுதை விரட்டிவிட்டு இரவு மங்கை ஆட்சிக் கொலுவில் அமர்ந்தாள். வெண்ணிலா வாழ்த்துக் கூறிக் கொண்டே வெளியே வந்தது. விண்மீன்கள் பராக்குக்கூறிக் கொண்டிருந்தன. மனோகரமான தென்றல் வீசிக் கொண்டிருந்தது. ஆனல் அந்த வான வெளியையே பார்த்துக் கொண்டிருந்த சுகுமாரனின் மனதிலே புயல் வீசிக் கொண்டிருந்தது.

சுகுமாரனின் விழிகள் அறையிலிருந்த படியே கம்பவுண்டை நோக்கின. வெளிக் கேட்டைத் திறந்து கொண்டு யாரோ வருவது தெரிந்தது. நிலவு, அப்போது கருமுகிலுக்குள் நுழைந்து கொண்டதால் ஆளை அடையாளம் தெரியவில்லை. முன் வாசலில் எரிந்துகொண்டிருந்த லைட்டும் அவிந்து கிடந்தது.

அறையிலிருந்து வெளியே வந்தான். அந்த உருவம் அவனருகில் வந்ததும், "யார் நீ....?" என்று கேட்டான்

சுகுமாரன். "மாதவன்....!"—என்று பதில் வந்தது.
"ஹூம்! அந்த துரோகியின் சகோதரனு....? அப்பனுக்கும் மகனுக்கும் மனைவியாக இருக்கிருளே, அந்தப் பதிவிரதா சிரோன்மணியின் சகோதரனு....?"

அவன் கத்தினன். "பளார்"—என்று அவன் கன்னத்தில் அறைந்தான் மாதவன். சுகுமாரன் அதிர்ந்து அப்படியே நின்று விட்டான். அவன் கண்கள் வெறிக்கப்பார்த்தன. இரண்டு மூன்று விநாடிகள் சென்றிருக்கும் "சுகுமார்....!" என்று நா தழ தழக்க அவனை அணைத்துக் கொண்டான். மாதவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

சுகுமார்! என் தங்கைத் தங்கக் குடமடா? அவள் துரோகியல்ல நீ நம்பு...! ரோஜா உனக்குத் துரோகம் இழைக்கவில்லை....! நஞ்சு குடிகொண்டிருக்கும் பாம்புப் புற்றல்ல ரோஜாவின் நெஞ்சு! உனக்குத்தான் அவள் காதலி—உனக்குத்தான் அவள் மனைவி....! உன் தந்தைக்கல்ல....! அவளைத் துரோகியென்று சொல்லாதே என் உள்ளம் அந்த வார்த்தையைக் கேட்டுத் துடித்தது....! இப்போதும் துடிக்கிறது....! அவளை உனக்காகத்தான் வளர்த்தேன்....! உன்னைப்போன்ற ஒரு இளைஞனைக் கணவனுக்கத்தான் துடித்துக் கொண்டிருந்தேன். வாழ்க்கையின் கடைக் கோடியிலிருக்கும் உன் தந்தைக்குத் தாரைவாக்க நான் வளர்க்கவில்லை. அவன் பணத்துக்காக—சொத்தை சூறையாடுவதற்காக உன் தந்தைக்கு மனைவியாகவில்லை ...! உன் தந்தைக்கு அவள் மனைவியாக இருக்கவே மாட்டாள்....!"—

மாதவன் நாதழுதழுக்கக் கூறினான். மரம்போல் நின்று கொண்டிருந்தான் சுகுமாரன். மாதவனின் விழிகளிலிருந்து சொட்டு விழுந்த சூடான கண்ணீர்த் துளிகூட அவனைச் சுடவில்லை.

"ரோஜாவே சொன்னாள்....மனைவி யென்று...!"... கிணற்றுக்குள்ளிருந்து வரும் ஓசைபோலிருந்தது, சுகுமாரனிடமிருந்து வந்த இந்த வார்த்தைகள்!

"ஆம், சுகுமார். அவள் சொல்லியிருப்பாள்! ஆனால் அந்த வார்த்தைகள் உயிரற்ற நிலையில்—உணர்வற்ற நிலையில்—வந்திருக்கும் அவளிடமிருந்து, சுயமான உள்ளத்திலிருந்து அந்த வார்த்தைகள் வந்திருக்க முடியாது! உணர்வோடு இருந்திருக்கும்போது அவள் சொல்லியிருக்க மாட்டாள். அவளுடைய உள்ளத்தை இன்னும் நீ தெரிந்திருக்கவில்லை!"

சுகுமாரன் ஒன்றும் பேசாமல் அறைக்குள் நுழைந்தான். அவன் பின்னாலே மாதவனும் சென்றான்.

"அவள் கழுத்தில் மின்னிய தாலி, என் தந்தையின் மனைவி யென்று எனக்குச் சொல்லிற்று!"

"தாலி....! அது கிடக்கட்டும். நான் சொல்வதைக் கேள்! நான் உன் முன்னாலே நின்றுகொண்டு பேசுகிறேன் கொந்தளிக்கும் உள்ளத்துடன் உன் முன்னால் நின்று பேசும் நான்—என் தங்கையின் கண்ணீரைக் கண்டு நெஞ்சு கலங்க உன் முன்னால் பேசிக் கொண்டிருக்கும் நான்–உன் வாயால் என் அருமை ரோஜா 'துரோகி' என்று கூறுவதைக் கேட்டுக்

கொண்டிருந்த நான்—அன்புடன் வருடிக் கொடுத்த அதே கை அவள் கன்னத்தில் 'பளார்' என்று அறைந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த நான்—இப்போது உன் முன்னுலே நின்று பேசிக்கொண்டிருக்கிறேனே அதற்காகத்தான் 'அவள் உன் அப்பாவுக்கு மனைவி என்று சொன்னுள். இல்லாவிட்டால் இதுவரை என் எலும்புகள் சுடுகாட்டில் மிஞ்சியிருக்கும். அவளுடைய வாழ்க்கை எப்படியிருக்குமோ—ஆனுல் அங்கே குவிந்து கிடக்கும் என் எலும்புகளைக் கண்ணீரால் கழுவிக் கொண்டிருப்பாள் என்பது மட்டும் நிச்சயம் !

" சுகுமார்....! இளமையிலே வார்த்தெடுத்த தங்கச் சிலை என் ரோஜா அவள் இருக்கவேண்டிய இடம் உன் தந்தையின் அந்தப்புரமல்ல. உன் வாழ்வுத் தோட்டத்திலே அமர வேண்டியவள். மீட்டாத வீணை அவள். அவளுடைய உணர்ச்சித் தந்திகளை மீட்டி இன்ப நாதம் உண்டாக்கும் வித்தை உன் தந்தைக்குத் தெரியாது. உனக்குத் தெரியும். என்ருலும் அவருக்கு மனைவியாக மாறினுள்....! பேசாத ஓவியம் அவள். அவளைப் பேசவைக்க உன் தகப்பனுக்கு தெரியாது. உனக்குத் தெரியும். என்ருலும் சுந்தரருக்கு அவள் மனைவியாக மாறினுள்....! ஏன் ? ஏன் ?

இதோ என்னைப் பார்...! நான் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தேன். சாவுடன் போராடிக் கொண்டிருந்தேன். ஆனுல் உன் தந்தை அந்த நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, என் ரோஜாவை மனைவியாக்கிக் கொண்டார்....! உன் காதலி என்று தெரிந்தும்.... அவர் தன் மனைவியாக்கிக் கொண்டார் !

" சுகுமாரன் துள்ளி யெழுந்தான். "என்ன சொன்னுய் ? எனக்குரியவள் என்று தெரிந்தும் அப்படிச் செய்து

கொண்டாரா ? இருக்காது ! என் காதலி என்று தெரிந்திருந்தால்—என் மார்பிலும் தோளிலும் புரண்டவள் என்று தெரிந்திருந்தால்—ஒருக்காலும் அவளை தனக்கு மனைவியாக்கிக் கொள்ளமாட்டார் !"

" ஆம், நேர்மையான உன் உள்ளம் அப்படித்தான் நினைக்கும்....வாழ்க்கையிலே ஒரு வரப்பு கூட்டி வாழ எண்ணும் உன் இதயம் அப்படித்தான் நினைக்கும். ஆனல்—உன் அப்பா இருக்கிருரே அவர் வாழ்க்கையை வேறு கண் கொண்டு பார்ப்பவர் !"

கேள்விக் குறியுடன் பார்த்தான் சுகுமாரன். மாதவன் நடந்ததை யெல்லாம் விளக்கினுன். சுகுமாரன் கொதித்தான்....சீறி யெழுந்தது சினம். சீர் கெட்டவர் சிதைத்து விட்டார் என் வாழ்க்கையை....!" என்று உறுமினுன்....!

" இல்லை, சுகுமார்....! உன் வாழ்க்கை சிதைக்கப்படவில்லை. இனித்தான் இருக்கிறது....!"

" மாதவா, என்ன இருந்தாலும், பகவான் சன்னதியிலே தாலி கட்டி மனைவியாக்கப்பட்டவளுடன், இனி நான்...."

" உளருதே....! பகவான்....! அந்தப் பகவானும் இதைப் பார்த்துக் கொண்டுதானே யிருந்தான். மகனுக்குரியவள் மகளைப்போல எண்ணத் தக்கவள். அப்படிப்பட்டவளைத் தாரமாக்க நினைத்து தந்திரங்கள் பல செய்தார் பணத்தின் பலம் கொண்டு. அதைப் பகவானும் பார்த்துக்கொண்டு தானே இருந்தார். நல்லது சொல்லித் தடுத்திருக்கலாமே, அறிவுரை கூறித் திருத்தியிருக்கலாமே ? அதைப் பார்த்துக்

கொண்டுதானே இருந்தார். ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கை முதுமையை யெட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டு முடமாக்கப்படுவதைக் கண்ணுல் பார்த்துக்கொண்டுதானே இருந்தார்? அவர் சன்னிதியில்தானே ரோஜாவின் சாவுக்கொடி கட்டப்பட்டது! என் தங்கையை ஒரு பக்கம் இருக்கட்டும். உன்னை நினைத்துப் பார்த்தாரா தந்தை, பையனுக்குரியவளைத் தாரமாக்க நினைப்பது பாபம் என்று மனதில் பட்டதா? கூடாது செய்கை; அடாத பழி என்று எண்ணினுரா? தன் பணத்தின் திமிரினுல் ஒரு ஏழைப் பெண்ணின் இளகிய நெஞ்சை, தன் காலடியில் பலாத்காரமாகக் கொன்றுர்—தன் மகனின் உள்ளத்தையும் சேர்த்துக் கொன்றுர் பகவான் சன்னதியில் எதையும் பார்த்துக்கொண்டுதானிருந்தான் அந்த ஆண்டவன். உன் தந்தையைப்போல் எத்தனையோ சுந்தரேஸ்வரர்கள் அந்தப் பகவானின் சன்னதியில் எத்தனை ரோஜாக்களின் வாழ்வைக் குட்டிச் சுவராக்கிருர்கள், பகவான் பார்த்துக் கொண்டுதானிருக்கிருர்! அவர் தடுக்கவில்லை....தடுக்கவும் முடியாது! காரணம் அது கல்! பகவான் கற்பனையிலே முளைத்த கனமான சொல்! அதைப்பற்றிக் கவலைப்படாதே!

இதோ பார். சுந்தரேஸ்வரர், உன் அப்பா, வாழ்க்கையின் அந்திப்படியிலே நிற்பவர். அவருக்கு இந்த எண்ணம் வரலாமா? தாலிக் கொடி! அவரால் ரோஜாவின் வாழ்வுக்குப் போட்ட சுருக்கு, அந்தச் சுருக்கிலிருந்து அவளைக் காப்பாற்ற வேண்டும், தாலி ஒன்றினுல் ஒருவளைத் தாரமாக்க முடியாது சுகுமார்! உணர்ச்சியற்ற அந்தத் தாலிக்கு—உணர்வற்ற அந்தத் தாலிக்கு—மனித இதயங்களின் துடிப்புத் தெரியாது, பணத்தைக் கண்டதும், கழுத்தில் ஏறி

உட்கார்ந்துவிடும்! அதைப் பற்றியும் 'நினைக்காதே!' தாலி தான் அவளை மனைவியென்று சொல்கிறதே தவிர, இன்னும் உன் தந்தைக்கு மனைவியாகவில்லை. அவள் இன்றும் கன்னிப் பெண்ணாகவே இருக்கிருள். உன் தந்தையின் படுக்கை அறையைப் பாம்புப் புற்று என்று மதித்திருக்கிருள். அவள் அங்கு போனதே கிடையாது....! போகவேமாட்டாள்.

"மாதவா....இப்போது என்ன செய்ய முடியும்?"

"எனக்கு வாக்குறுதி கொடு! என் ரோஜாவைக் கண் கலங்காமல் பார்த்துக் கொள்வேன்....என்று வாக்குறுதி கொடு! ரோஜா என் மனைவிதான்....! என்று சொல்! அது மட்டும்தான் நீ செய்ய வேண்டியது....!"

சுகுமாரன் அப்படியே வாக்குறுதி செய்து கொடுத்தான்....! மாதவன் சென்றுவிட்டான். சுகுமாரனுக்கு அதற்குமேல் ஒன்றும் தோன்றவில்லை. மாதவன் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டு நின்ருன்.

சுகுமாரனின் வீட்டை விட்டுப் புறப்பட்டு விறு விறு என்று நேரே, சுந்தரரின் மாளிகைக்கு வந்தான். இரவு நேரம் அமைதியாக இருந்தது. பங்களாவுக்குள் நுழையும் போது ஒருவித சந்தடியுமின்றி நிச்சலனமற்றிருந்தது. தன் அறைக்கு வந்து பார்த்தான். அங்கே ரோஜாவைக் காணவில்லை. நாலைந்து அறைகளைத் தாண்டி அப்பாலிருக்கும் சுந்தரேஸ்வரரின் படுக்கை அறைக்குச் சென்ருன். கதவு தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. உள்ளிருந்து ரோஜா விக்கி விக்கி அழும் சத்தம் கேட்டது. வெளியில் நின்றபடியே உற்றுக் கவனித்தான், உள்ளே நடப்பதை.

" மடப் பயல்....! மனைவியாக்கத் துடிக்கிருன் ! உனக்குக் கூடப் புத்தியில்லை...? தாலி கட்டிய கணவன் நான் இருக்க இன்னெருவனுடன்—அதுவும் என் மகனுடன்—கொஞ்சுவது அழகா ?—அவன்தான் விஷயம் தெரியாது பழைய ஞாபகத்தில் தப்பும் தவறும் செய்யத் துணிந்தானென்ருல் அதற்கு நீயும் இடம் கொடுக்கவேண்டுமா....?

" இல்லை....! அவர் தவறு செய்யவில்லை....நான்தான்..., சுந்தரரின் பேச்சின் நடுவே, விக்கல் குரலுடன் கூறினுள் ரோஜா இதை.

" ஆம், நீ யோசித்திருக்க வேண்டும்....! ரோஜா நீ இப்போது என் மனைவி. உன்னைப் பலாத்காரமாகக் கலியாணம் செய்யவில்லை. உன் இஷ்டத்தின் பேரிலேதான் கலியாணம் செய்து கொண்டேன். என் விருப்பப்படி நீ நடக்க வேண்டியவள். இன்று, இப்போது என் விருப்பப்படி நடக்க வேண்டும். உன்னைப் பொம்மையைப்போல் உட்கார வைத்து அழகு பார்ப்பதற்காகத் தாலி கட்டவில்லை உன்னை....!"

" ஐயோ இன்று மட்டும் என்னை விட்டு விடுங்கள்....! என் மனம் சரியாக இல்லை !"

" முடியாது ! ஒருக் கணமும் என்னல் பொறுக்க முடியாது ! இன்று...!

" ஐயோ...விடுங்கள் !"

ரோஜாவுக்கும், சுந்தரருக்கும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. வெளியே நின்று கவனித்துக் கொண்டிருந்த மாதவனின் உள்ளம் குமுறிற்று. பற்கள் நற நற

என்று கடித்துக் கொண்டான். 'ரோஜா....!" — என்று உரக்கக் கத்திக் கொண்டே கதவை ஓங்கி இடித்தான். உள்ளே இருந்த ரோஜா " அண்ணா....! அண்ணா...." என்று அலறினாள்.

திடுக்கிட்டார் சுந்தரேஸ்வரர். ஆத்திரம் அவரை ஆட்டிப் படைத்தது. ஆவேசம் சதுராட்டம் போட்டது. வீராவேசத்துடன் கதவைத் திறந்தார். எதிரே கனல் கக்கும் கண்களுடன் மாதவன் நிற்பதைக் கண்டதும் ஒரு கணம் அவருடைய உணர்ச்சிகளெல்லாம் சில்லிட்டு உறைந்தன. மறு விநாடி நரைத்துப்போன அவருடைய மீசை துடித்தது. விழிகள் சேவலின் கொண்டைப் பூவைப் போல சிவந்தன. கோபம் கொப்பளித்தது.

"—இந்த நேரத்தில், இங்கே எதற்காக வந்தாய்....? எதற்காக வந்தாய்....? எதற்காக வந்தாய்....! போ....! நில்லாதே இங்கே...! போ....!"—என்று கூவினார்.

மாதவன் ஒன்றுமே பேசவில்லை. பீதி நிறைந்த முகத்துடன் ஒரு மூலையில் நடுங்கிக்கொண்டு நின்ற ரோஜாவைப் பார்த்தான். பிறகு திடீரென்று உள்ளே பாய்ந்தான் ரோஜாவின் கரங்களை இறுகப் பிடித்தான். அவளை வெளியே இழுத்துக் கொண்டு வேகமாக வெளியே வந்து, விறு விறு என்று தன் அறையை நோக்கி நடந்தான்.

திக் பிரமையுடன் இதைப் பார்த்துக் கொண்டு நின்ற சுந்தரர் திடுக்கிட்டார். " ரோஜா போகாதே ! நில் ! போகாதே....! போகாதே...! நில்....! உன் புருஷன் சொல்கிறேன் போகாதே....! நில்....! தாலி கட்டிய கண்வன் கட்

டயிடுகிறான். போகாதே! நீ என் மனைவி....! ரோஜா நீஎன் மனைவி....! என் மனைவி...! அவனுடன் போகாதே....!" என்று உளறிக்கொண்டே, அவர்களிருவரையும் பின் தொடர்ந்து ஓடினார்.

ரோஜா முகத்தைத் திருப்பி சுந்தரரைப் பார்த்தாள். அதே சமயத்தில் மாதவனும் பின்னால் திரும்பினான். அப்போதும், ரோஜாவின் கரங்களை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தான் மாதவன்.

ஒரு கணம் நின்றான். பிறகு...." சுந்தரரே, எங்களைத் தொடராதேயும்....! நில்லும்....! அங்கேயே நில்லும்....!"— என்று உரக்கக் கத்தினான்.

சுந்தரர் அதிர்ந்து அப்படியே நின்று விட்டார். ஒரு அடி கூட எடுத்து வைக்க வில்லை. அவர் உடம்பெல்லாம் பட படத்தது. ஆனால், கோபமென்னும் தீ, இன்னும் கொளுந்துவிட்டு எரிந்தது.

"மாதவா....! அவள் என் மனைவி....! மரியாதையாக விட்டு விடு....! அண்ணன் என்ற அதிகாரத்தால் ரோஜாவை என்னை விட்டுப் பிரித்தால்—"

மாதவன் சிரித்தான். அந்தச் சிரிப்பு பயங்கரமாக இருந்தது. "கணவன்....! என் ரோஜாவுக்கு நீர் கணவன்....! அவளுடைய வாழ்க்கையில் கண்ணீரையும், கலக்கத்தையும் கொடுத்த நீர் கணவன்! அவளுடைய ஆசைக் கனவுகளை—இன்பக் கற்பனைகளை உமது பணத்திமிரின் கீழ் போட்டு மிதித்து நாசப்படுத்திய நீர் கணவன்! உமது மகன்

என் ரோஜாவின் காதலனைத்தான் சொல்கிறேன். அவனிடமிருந்து பிரித்துப் பிள்ளை விளையாட்டு விளையாட முயலும் நீர் கணவன்!...." என்று கூறிவிட்டுச் சிரித்தான் கல கல வென்று. அந்தச் சிரிப்பு ஓய்ந்ததும் மேலும் சிதறிக்கொண்டு வெளியே வந்தன வார்த்தைகள்!

"நரைத்த மீசை உடையவனு என் ரோஜாவுக்குக் கணவன்? சுடுகாட்டுக்குக் காலத்தைக் குறித்து நிற்கும் நீரா, என் அருமை ரோஜாவுக்குக் கணவன்?...சுந்தரரே நீர் கணவனல்ல....! நீர் கணவனல்ல....! என் அருமை ரோஜாவின் வாழ்வைச் சூறையாட வந்த காலன்....!"—என்று பயங்கரமாகக் கர்ஜித்தான்.

"மாதவா....! நிறுத்து....!"—என்று கத்திக்கொண்டே ஓடி வந்தார் சுந்தரர். மறு விநாடி, அவரது கரம் மாதவனின் கன்னத்தில் 'பளார்' என்ற சத்தத்துடன் பதிந்தது.

"அண்ணு...!"—என்று அலறினுள் ரோஜா. ஆனுல், அந்த அலறலை அமுக்கிக் கொண்டு, மீண்டும், சுந்தரரின் கரங்கள் எழுப்பிய "பளார்....பளார்!" என்ற சத்தம் ஓங்கி முழங்கிற்று. மளமள வென்று, மாதவனின் கன்னத்தில் ஓங்கி அறைந்து கொண்டிருந்தார் சுந்தரர்.

மாதவனின் கன்னங்கள் சிவந்தும், வீங்கிக் கொண்டுமிருந்தன. அவன் எதிர்த்து ஒன்றுமே செய்ய வில்லை. ஆனுல், அவனுடைய ஒருகை மட்டும், ரோஜாவின் கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தது.

சுந்தரரின் அடி ஓயவில்லை. இதற்குள், திமிறிக்கொண்டு ரோஜாவை இழுத்தவாறே தன்னறையை நோக்கி ஓடினுன்.

அதே சமயத்தில், சுந்தரரும் தன் அறையை நோக்கி ஓடினார்.

ரோஜாவைத் தன்னறையில் தள்ளிவிட்டு கதவை இழுத்து வெளியே பூட்டிக்கொண்டு மீண்டும் திரும்பினான், சுந்தரரின் அறையை நோக்கி, ரோஜாவின் "அண்ணா!" அண்ணா!' என்ற அலறல்கூட அவனுடைய செவிகளில் ஏற வில்லை.

சுந்தரரின் விழிகள் செக்கச் செவேலென்றிருந்தன. முகம் கோரத்தின் உச்சியைக் கோலம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தது. அவருடைய கையில் கத்தி ஒன்று பளபள வென்று மின்னியது, இத் தோற்றத்துடன் தன்னுடைய படுக்கை அறையின் வாசலிலே நின்று கொண்டிருந்தார்.

மாதவன் இருக்குமட்டும் ரோஜாவை அனுபவிக்க முடியாது. அவன் சுகமாக எழுந்திருந்தால், தங்கையைத் தன்னிடமிருந்து பிரிக்க முயற்சிப்பானே தவிர, மனைவியாயிருக்க ஒருபோதும் சம்மதிக்கமாட்டான். ரோஜா சம்மதித்தால் கூட, அவன் அதை ஏற்றுக் கொள்ளமாட்டான். மாதவன் தடை ஒன்றும் செய்யாமலிருந்தால் சரி. இல்லை—அவனை ஒழித்துக் கட்ட வேண்டியதுதான்—என்று ஏற்கனவே தீர் மானித்து வைத்திருந்தார் சுந்தரேஸ்வரர். அப்போது அங்கே நடந்த சம்பவம் மாதவ்னின் எண்ணத்தைத் தெட்டன விளக்கிற்று அவருக்கு. உடனே தன் தீர்மானத்தை அமுல் நடத்த ஆயத்தமாக நின்று கொண்டிருந்தார்.

மாதவன் சிறிது அச்சமின்றி—தயக்கமின்றி—மெல்ல மெல்ல நடந்து வந்தான். அவனுடைய அதரங்களுக்கிடை

யில் புன் சிரிப்பு நெளிந்தோடி மறைந்தது. இதற்கிடையில் கத்தியுடன் மின்னலைப்போல் மாதவன்மேல் பாய்ந்தார் சுந்தரர். ஆனல்—

சிறிது நேரம் சென்றதும் அந்த அறைக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு, ரோஜா இருந்த அறைக்குள் நுழைந்தான் மாதவன்.

திகில் பிடித்தாட்ட, விழிகளில் நீரைச் சொரிய விட்டுக் கொண்டு நின்றிருந்தாள் ரோஜா.

" ரோஜா கிளம்பு !"

" எங்கே அண்ணு....?'

' கேள்வி கேட்காதே, வா என் பின்னுலே !'

இருவரும் அந்த மாளிகையை விட்டு வெளியே வந்தார்கள். நாலைந்து வீதிகளைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தார்கள்.

ஒரு சந்தின் முனையில் பெரிய மாடிவீடு ஒன்று இருந்தது. அந்த மாடி வீட்டின் கேட்டைத்திறந்து கொண்டு, வெளிவராந்தாவில் வந்து நின்று சொண்டு " சுகுமார்....! சுகுமார்....!" என்று குரல் கொடுத்தான். மாதவன். அவனது குரலொளி வராண்டாச் சுவரில் மோதி எதிரொலித்ததே தவிர ஒரு பதிலும் உள்ளிருந்து வரவில்லை. மீண்டும் கூப்பிட்டான் மாதவன். சில நிமிடங்கள் சென்று, ஒரு வேலையாள் கதவைத்திறந்துகொண்டு வெளியே வந்தான்.

" சுகுமார் இருக்கிருனு ?"

" இல்லீங்களே ! நீங்க யாரு ?"

" அதை அப்புறம் தெரிந்து கொள்ளலாம். சுகுமாரன் எங்கே ? இதைச்சொல் முதலில் !"

" அவரு இங் இல்லீங்களே....!"

" எங்கே என்று கூற முடியுமா ?"

" எனக்குத் தெரியாதுங்களே....! நேற்றுக் காலையிலே வீட்டை விட்டுப்போனவரு இன்னும் வரலையே...!"

" சரி " என்று சொல்லிவிட்டுப் பின்னால் நின்ற ரோஜாவைப் பார்த்தான் மாதவன். சில விநாடிகள் அவன் சிந்தனை எங்கேயோ சுழன்றது.

" ரோஜா, வா....!" என்று கூறிக்கொண்டே வீதிக்கு வந்தான்.

இருண்டு கிடந்த அந்த இரவில் வானத்திலே பரவிக் கிடந்த விண்மீன்கள் மட்டும் விழித்துக்கொண்டு சிரு ஒளி பரப்பி நின்றன. சில நாழிகைக்கு முன் நடந்து முடிந்த பயங்கரச் சம்பவங்களைப் போலவே அந்த இரவும் பயங்கரமாக இருந்தது ரோஜாவுக்கு. ஆனால் மாதவனோ, நெஞ்சிலே ஒரு வெறி ஏறி நிற்க நடந்து கொண்டிருந்தான்.

* * *

அதே இரவு.

சுந்தரருடைய அந்த பிருந்தாவன மாளிகைக்குள் நுழைந்தான் சுகுமார். எங்கும் பயங்கரமான அமைதி சூழ்ந்திருந்தது. ஒவ்வொரு அறையையும் திறந்து பார்த்துக்

கொண்டே வந்தான். எல்லா அறைகளும் சலனமற்று ஒரு பயங்கரத் தோற்றத்துடன் காட்சியளித்துக் கொண்டிருந் தன. சுகுமாரின் மனதிலே ஒருவித அச்சம் குடிகொள்ளத் துவங்கியது.

ரோஜாவின் அறைக்கு வெளியே நின்று கொண்டு கத வின் இடுக்கால் உள்ளே பார்த்தான். ஒரே இருட்டாகத் தான் கிடந்தது அறை. "ரோஜா....ரோஜா....!" என்று மெதுவாகக் கூப்பிட்டான். உள்ளிருந்து பதில் வராததைக் கண்டதும், ஒன்றுமே புரியவில்லை. கதவைத் தட்டினன். யாரும் இருந்தால்தானே—

கதவைத் தள்ளிவிட்டு சுவிட்சைப் போட்டான். உள் ளே ஒருவரையுங் காணுமே...?! என்ற சிந்தனையுடன் வெளியே வந்து, சுந்தரரின் அறைக்குள் சென்று சுவிட்சைப் போட்டான்.

எந்தக் கட்டிலில் ரோஜாவைப் படுக்கவைக்கப் போ ராடினரோ, அதே கட்டிலில் அமைதியான தூக்கத்தில்— ஆனல்—நிரந்தரமான தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார் சுந்தரர். உயிரற்ற உடல் ஒழுங்காகக் கட்டிலிலிருந்த மெத்தையில் கிடந்தது.

சுகுமார் மெதுவாக கட்டிலின் அருகில் சென்று பார்த் தான். அவர் தூங்குவதுபோல் தெரிந்தது. ஆனல், ஒரு வித குழப்பம் அவன் மனதில் குடியேறி சுந்தரரை நன்ருகக் கவனிக்க வைத்தது.

கையை மூக்கின்மேல் வைத்துப் பார்த்தான். மூச்சு வரவில்லை. உடம்பைத் தொட்டுப் பார்த்தான் குளிர்ந்திருந்

தது. "ஐயோ அப்பா....!" என்று அலறிக் கொண்டே அந்தப் பிணத்தின்மேல் விழுந்தான். அவனுடைய அலறல் அந்த அறைக்குள்ளேயே அமுங்கிக் கரைந்து கொண்டிருந்தது. துடிப்பும், கலவரமும், கண்களில் நீரும் ஒன்று சேர சுந்தரரின் உடலை உற்றுக் கவனித்தான். எவ்விதமான ரத்தக் காயங்களும் இல்லை. கழுத்தைக் கவனித்தான். விரல்கள் பதிந்த அடையாளம் அங்கேயிருந்தது. "கழுத்தை நெரித்துக் கொன்று விட்டார்களே...!" என்று ஓலமிட்டுக் கொண்டே வெளியே தலை தெறிக்க ஓடினான்.

* * *

கதிரவனின் புன்னகை கிழக்கு வானத்திலே படர்ந்து கொண்டிருந்தது. பொழுது புலர்ந்து காலை நேரத்தைக் காட்டி வந்து கொண்டிருந்தது.

போலீஸ் ஸ்டேஷனின் அறையிலே கதிரவனின் ஒளிக் கீற்றுக்கள் வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. ஆனால் சிந்தனை தேங்கிய முகத்துடன் இருந்த இன்ஸ்பெக்டருக்கு முன்னால் அமர்ந்திருந்த சுகுமாரின் இதயம் மட்டும் இருண்டு கிடந்து.

"உமது தந்தையைக் கொன்றவர்களைத் தெரியாதென்கிறீர்—யார் மேலாவது சந்தேகம் இருக்கிறதா? என்று கேட்டால் இல்லை யென்று சொல்கிறீர்...!" என்று பெருமூச்சுடன் கூறி ஓய்ந்த இன்ஸ்பெக்டரின் முகத்தை ஒரு முறை பார்த்துவிட்டு விழிகளைத் திருப்பிக் கொண்டான் சுகுமார்.

ரோஜாவையும், மாதவனையும் மாளிகையில் காணாததாலும், மாதவன் தன்னிடம் ஆத்திரமாகப் பேசிவிட்டுச்

சென்றதாலும், அவனே அப்பாவைக் கொன்றிருக்க வேண்டும் என்று நினைத்தான். சுந்தரரைக் கொல்ல மற்றவர்களுக்குக் காரணமில்லை. மாதவனுக்கு அந்தக் காரணம் நிறைய இருந்தது. சந்தேகமேயில்லை. அப்பாவைக் கொன்றுவிட்டு ரோஜாவையும் அழைத்துக்கொண்டு எங்கோ ஓடிவிட்டான் மாதவன். இப்படி அவன் நினைத்தான். ஆனால் இன்ஸ்பெக்டரிடம் அவன் இதைச் சொல்லவில்லை!

மாதவன் ரோஜாவைப் பற்றித் தன்னிடம் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் சிந்தித்துப் பார்த்தான். ரோஜாவை எப்படியாவது அப்பாவிடமிருந்து மீட்கவேண்டும். இதற்காக அப்பாவுடன் போராட வேண்டும். இந்தப்போராட்டத்திலே என்ன நிகழ்ந்தாலும் சரி—என்ற தீர்மானத்துடன்தான் அந்த ராத்திரியில் அங்கு வந்தான், ஆனால்,—

அப்பா இறந்துவிட்டார். ரோஜாவைக் காணவில்லை. மாதவன்மேல் அவனுக்கு ஆத்திரம் வருவதற்குப் பதிலாக அனுதாபம் தான் ஏற்பட்டது. தனக்காக—தன்னிடம் ரோஜாவை ஒப்படைப்பதற்காக—இந்தக் கொடூரமான கொலையைச் செய்திருக்கிறான் மாதவன். தன்னுடைய நலத்துக்காக அல்ல—என்னுடைய சுகத்துக்காக, அப்பாவைக் கொன்றுவிட்டான். ரோஜாவையும் கூட்டிக்கொண்டு எங்கு அலைகிறானோ....! அப்பா....தகாத காரியத்தைச் செய்தார். தன்னுயிருக்கு உடலை வைத்துக்கொண்டார். மாதவன்.... மாதவன்....ஆம், அவனை நாம் காட்டிக் கொடுக்கக் கூடாது....!"

இந்தச் சிந்தனைகளில்தான் அவன் புரண்டு கொண்டிருந்தான்.

சுந்தரரைக் கொன்றவர்கள் இன்னுரென்று திட்டமாகத் தெரியவில்லை போலீஸாருக்கு. திணறிக் கொண்டிருந்தார்கள். இரண்டொரு நாள் கழித்து, மாதவனும், ரோஜாவும், சுந்தரரின் மாளிகையில் இருந்த தகவலைத் தெரிந்து கொண்டார்கள். மாதவனைப் பிடிக்க வாரண்டுகள் பறந்தன.

* * *

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. போலீஸாரின் பிடிவாரண்டு மாதவனைத் தேடிக் கொண்டிருக்கும்போதே, சுகுமாரும் அவனைத் தேடி அலைந்தான்.

மாதவனையோ ரோஜாவையோ அவனுல் கண்டுபிடிக்க முடியவில்லை. பித்துப் பிடித்தவன் போல் மனம் போன போக்கில் அலைந்து திரிந்தான். உணர்ச்சியும், உயிரும் பறிக்கப்பட்ட நடைப் பிணம்போல் இருந்தான். அவனுடைய இதயத்தில் ரோஜாவின் உருவம் இருந்து கொண்டு அவனை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. சுகுமார் சுருங்கிப் போனுன்.

ஒரு நாள் இரவு தூக்கத்தைத் துரத்தியடித்து விட்டு, முன் ஹாலில் ஏதோ சிந்தனையிலிருந்த சுகுமாரின் காதில், "சுகுமார்...சுகுமார்....!" என்று யாரோ கூப்பிடுவது கேட்டது. மெல்ல எழுந்து சென்று கேட்டைத் திறந்தான்.

அழுக்கு உடை, சிக்குற்றுக் கிடந்த தலை மயிர், தாடி, மீசை இந்தக் கோலத்துடன் ஒருவன், "சுகுமார்...! உன்னை எத்தனை நாளாகத் தேடுகிறேன் தெரியுமா ? இன்று தான் சந்தித்தேன்....!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான். அவனைக் கண்ட சுகுமாருக்கு ஆளை அடையாளம் தெரியவில்லை. திடுக்கிட்டான், மிரள மிரள விழித்தான். அவன் நெஞ்சு 'டக் டக்' என்று அடித்துக் கொண்டது.

சுகுமாரனின் பார்வையில் பயம் கூத்தாடுவதைக் கண்ட அந்த மனிதன் மெதுவாகச் சிரித்தான். கருத்தடர்ந்த மயிரினுல் மூடுண்டு கிடந்த அவனுடைய முகத்திலே, சிரித்த தால் வெளியே தெரிந்த பற்கள் மட்டும் வெண்மை ஒளி காட்டி மறைந்தது. அப்போதுதான் அவனை யாரென்று தெரிந்து கொண்டான் மாதவன்.

"மாதவனு...!" என்ருன் திகைப்பாக.

"ஆமாம்....!"—என்று தலையை அசைத்துவிட்டு அங்கு மிங்கும் தன் விழிகளைத் திருப்பினுன்.

"இங்கே யாருமில்லை. பயப்படாதே மாதவா.... உள்ளே வா....!"

"வேண்டாம் சுகுமார்....! நான் உள்ளே வரவில்லை. ஆனல் நீ என்னுடன் வா....உடனே வா....! தாமதிக்காதே... கிளம்பு....!" என்று துரிதப்படுத்தினுன் மாதவன்.

"எங்கே மாதவா...?"

"சொல்கிறேன் வா....நான் இங்கு நிற்கக் கூடாது...! ம்....கிளம்பு....!" என்று அவசர மூட்டினுன் மேலும்,

சுகுமாரன் ஒன்றுமே பேசவில்லை. மாதவன் பின்னுலே சென்ருன். தலையில் கறுப்புத் துண்டால் மூடிக் கொண்டு நடந்து கொண்டிருந்தான் மாதவன். அடிக்கடி நின்றும், தயங்கியும், பதுங்கியும் சென்று கொண்டிருந்தான். அவனுக் கொத்தபடியே திகில் கொண்ட உள்ளத்துடன் நடந்து கொண்டிருந்தான் மாதவனும்.

ஊருக்கு வெளியே வந்ததும், நடையைச் சிறிது மட்டுப் படுத்திக் கொண்டு மேலும் போய்க் கொண்டிருந்தான். வயல் காடுகள், வாய்க்கால்கள், குன்றுகள், புதர்கள், தோப்புகள் எல்லாவற்றையும் தாண்டி,நடந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு மலையடிவாரத்துக்குச் சிறிது தூரத்தில் அடர்ந்த புதரும், அதைச் சுற்றிலும் மரங்களும் செடிகளும் இருந்தன. அதை ஒதுக்கிக் கொண்டே உள்ளே சென்றுன் மாதவன். அந்த இருண்ட இடத்தைத் தன்னிடமுள்ள டார்ச் லைட்டின் உதவி கொண்டு, கடந்ததும், அந்த டார்ச்சை மறுபக்கம் திருப்பினுன். ஒரு சிறு குடிசை இருந்தது. சுகுமார் திகைப்புடன் அந்தக் குடிசையைப் பார்த்தான். சுகுமார்.

"பயப்படாதே சுகுமார்...வா....!" 'இங்கே.... !'

"இந்த இருண்ட காட்டிலேதான் உன் சொர்க்கம் இருக்கிறது !"

"என்ன...சொர்க்கமா....! மாதவா நீ சொல்வது...!"

"புரியவில்லையாக்கும்....! ஹூம்........சுகுமார்...உன் ரோஜா இங்குதான் இருக்கிருள்...!"—என்று கூறிக் கொண்டே குடிசையின் கதவில் தொங்கிக் கிடந்த 'பூட்டைத்திறந்து கதவை ஓசைப்படாமல் தள்ளினுன்.

உள்ளே சென்றதும் தீக்குச்சியைக் கிழித்து அங்கிருந்த மெழுகு வர்த்தியைக் கொளுத்தினுன்.

தரையிலே ஒரு ஓலைப் பாயில் சுருண்டு படுத்துக் கொண்டு நீண்ட துயிலில் இருந்த ரோஜாவைக் கண்ட சுகுமாரனின் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. 'ரோஜா ....!' என்று கூவிக் கொண்டே அவளருகில் அமர்ந்து அவளை வாரி எடுத்து அணைத்துக் கொண்டான்.

திடுக்கிட்டு விழித்த ரோஜா அவனைக் கண்டதும் "சுகுமார்...."என்று தோளில் சாய்ந்து கொண்டு விம்மினுள்.

இந்தக் காட்சியை, மெழுகு வர்த்தியின் சிறிய ஒளியில் பார்த்துக் கொண்டு நின்ற மாதவனின் விழிகளில் கண்ணீர் திரண்டு நின்றது.

"சுகுமார்...!" என்று மெதுவாகக் கூப்பிட்டான். அவன் குரல் கம்மியிருந்தது.

"என்னுடைய கடமை தீர்ந்து விட்டது சுகுமார். இந்தக் காட்சியைக் காண்பதற்காகத்தான் இந்தக் கோலத்துடன் இந்த இருண்ட இடத்திலே காலங்கழித்து வந்தேன்.

சுகுமார். நீ என்னை மன்னித்து விடு! நான் கொலைகாரன்....; உன் தந்தையைக் கொன்ற குற்றவாளி. போலீசாரின் கண்களுக்கு அகப்படாமல், சட்டத்தின் கரங்களில் சிக்காமல் அலைந்து திரிந்த நாட்கள் இன்றுடன் விடைபெற்று விட்டன.

சுகுமார், என் தங்கையை உனக்குத் தருவதற்காக—அவளுடைய ஆசைக் கனவுகளை நிறைவேற்றுவதற்காக—என் அருமை ரோஜாவை அவளுடைய காதலனிடம் சேர்ப்பதற்காக—அவளுடைய வாழ்வு வசந்த ருதுவாக இருப்பதற்காக—உன் தந்தையைக் கொன்றுவிட்டேன்.

அவர் ரோஜாவை மனைவியாக்கி வாழ முயன்ற தன் மூலமாக இரண்டு உயிர்களைக் கொல்ல இருந்தார். ஒன்று ரோஜா—மற்றது நீ. பலாத்காரமாக—எப்படியாவது—அவளது கற்பைக் குலைத்து மனைவியாக்கிக் கொண்டால், ரோஜா வாழ மாட்டாள் இறந்து விடுவாள்...! நீயும் உயிருடன் இருக்க மாட்டாய்! ஒன்று தற்கொலை செய்து கொள்வாய்; அல்லது சிறுகச் சிறுக இறந்து கொண்டிருப்பாய். ஆக இரண்டு உயிர்கள் பலியிடப்பட்டிருக்கும். நான் இந்த இரண்டு இளம் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக ஒரு கிழட்டு உயிரை—வாழ்ந்து முடிந்த உயிரைப் பலி கொண்டு விட்டேன்....!

அன்று ராத்திரி உன் தந்தையை நான் கொலை செய்திருக்காவிட்டால், அதன் விளைவு வேறு விதமாக முடிந்திருக்கும். அது மட்டுமல்ல....

உன் அழகுக் காதலி....இன்ப ரோஜா....உன் தந்தையின் மிருகப் பாய்ச்சலுக்குப் பலியாகி யிருப்பாள்!.......

உன் தந்தை என்னைக் கொல்ல வந்தார்...! இதில் விசித்திர மென்ன வென்றால்—அவர் என்னைக் கொல்ல ஏற்கனவே திட்டமிட்டிருந்தார்....! நானும் அப்படித்தான்...! எப்படியோ அவருடைய கதை முடிந்து விட்டது.

உன்னைத் தேடி வீட்டுக்கு வந்தேன் ரோஜாவையும் அழைத்துக் கொண்டு. நீ இல்லை...! உன்னைக் கண்டு பிடிக்க மட்டும் தலை மறைவாக இருக்கத் தீர்மானித்தேன் அத்தீர்மானத்தின் முடிவு தான் இந்தக் குடிசை!

எத்தனையோ சமயங்களில் போலீசாரிடம் மாட்டப்பட இருந்தேன். ஆனால் உன்னைத் தேடிக் கண்டுபிடிக்கும் வரை, நான் அகப்பட்டுக்கொள்ள மாட்டேன் என்று எனக்குள்ளே சொல்லிக் கொள்வேன்.

பகல் முழுதும் இங்கு இருப்பேன். இரவானதும் ரோஜா தூங்கி விடுவாள். நான் உன்னைத் தேடிப் புறப்பட்டு விடுவேன். மூன்றும் சாமத்தில்தான் திரும்பி வருவேன். நான் உன் வீட்டையே இரவு நேரங்களில் வட்டமிட்டுக் கொண்டிருப்பேன். என்றைக்காவது ஒரு நாள் நீ என் கண்ணில் படுவாய் என்ற அசையாத நம்பிக்கை,

சுகுமார்....மகனுக்கு மனைவியாக இருந்தவள், தந்தைக்கும் தாரமாக இருக்க முடியாது: இருக்கக் கூடாது. இந்த எண்ணத்தின் விளைவு. உன் தந்தை கொலை....! என்னை

மன்னித்துவிடு........! இதோ உன் ரோஜா...! அழைத்துச் செல்....! சுகமாக வாழுங்கள்....!"

ஆடாது அசையாது இவ்வளவையும் கேட்டுக் கொண் டிருந்த ரோஜாவும், சுகுமாரும், விழிகளில் நீர் முத்துக் களைத் திரட்டினர்.

"சுகுமார்....! இனி ஏன் அழவேண்டும்! சரி, எழுந் திருங்கள். விடிவதற்குள் போய்விடவேண்டும்....!" கூறிக் கொண்டே எழுந்தான் மாதவன்.

மூவரும், வந்த வழியே திரும்பி ஊர் அருகே வந்து விட்டனர் ஒரு ரோட்டுப் பிரிந்து சென்றது. அந்த இடத் தில் நின்று விட்டான் மாதன்.

ரோஜா திரும்பினள். "ஏன் அண்ணு நின்று விட்டாய்?

"நான் இந்த வழியாகப் போகிறேன்—நீ சுகுமார னுடன் போ...!"

"எங்கே அண்ணு போகிருய்?"

"என் இருப்பிடத்துக்கு—நான் இனிமேல் இருக்க வேண்டிய இடத்துக்கு" என்று முணகினன். அவன் கன் னத்தில் கண்ணீர்த் துளிகள் உருண்டு விழுந்தது அந்த இருட்டில் ரோஜாவுக்குத் தெரியவில்லை,

இருளில் மறைந்து கொண்டிருந்த மாதவனைப் பார்த் துக்கொண்டே சுகுமாரனும், ரோஜாவும் நின்றனர்.

(மு ற் று ம்,)

---

# எமது வெளியீடுகள்

## இளங்கீரன் தீட்டிய

1. அழகு ரோஜா விலை ரூ. 1—0—0
2. வண்ணக்குமரி (அச்சில்)
3. பட்டினித் தோட்டம் (அச்சில்)
4. மாதுளா (அச்சில்)
5. வேண்டாத முத்தம் (அச்சில்)

## ரா. தணலன் தீட்டிய

1. திருமணம் விலை ரூ. 1—8—0
2. செம்மலர்கள் (நாடகம்) 1—0—0
3. காமினியின் காதலர்கள் 1—0—0
4. தியாக மூர்த்தி (அச்சில்)
5. அன்புக்கூடு (அச்சில்)

**சத்தி பதிப்பகம்**

தபால் பெட்டி எண் 1684

சென்னை - 1.

Jacket Printed at Sri Bharathi Press, Choolai, Madras-7.